


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞான அறிவுச்சுடர்" சஞ்சிகை
## எழுத்தாளர்களும் நிர்வாகிகளும்

| | | |
|---|---|---|
| 1. ஆன்மிகம்<br><br>திரு.<br>கு. சோமசுந்தரம் | 2. தமிழ் மரபு<br><br>திரு. எஸ். கே.<br>சிவபாலன் | 3. இந்து மதக் கோட்பாடு<br><br>திருமதி. வசந்தா<br>வைத்தியநாதன் |
| 4. முத்தமிழ் அரங்கம்<br>*(இயல்)*<br><br>திரு.எஸ்.கே.<br>சிவபாலன் | முத்தமிழ் அரங்கம்<br>*(இசை)*<br><br>திரு. டபிள்யூ எஸ்.<br>செந்தில்நாதன்<br>**சட்டத்தரணி** | முத்தமிழ் அரங்கம்<br>*(நாடகம்)*<br><br>திருமதி.<br>பிரகதாதில்லை<br>நடராஜன் |
| 5. திருக்குறள்<br><br>திரு.சி.<br>சிவநிர்த்தானந்தா | 6. கம்பராமாயணம்<br><br>திரு.<br>ஜெயராஜ் | 7. சிறுவர் பகுதி<br><br>வானொலி மாமா<br>திரு.<br>மாஸ்டர்<br>சிவலிங்கம் |
| 8. மருத்துவம்<br>*சித்த ஆயுள்வேதம்*<br><br>Dr.அல்போன்ஸ்<br>அத்தனாசியார் | மருத்துவம்<br>*அலோபதி*<br><br>Dr.எம். கே.<br>முருகானந்தன் | மருத்துவம்<br>*ஹோமியோபதி*<br><br>Dr. எம். வி.<br>தில்லைச்-<br>சந்திரன் |
| 9. ஜோதிடம்<br><br>ஜோதிட<br>ஆய்வுக்குழுவினர் | பொதுப் பகுதி<br><br>திரு.எம். சோமகாந்தன் | பல்துறைப் பகுதி<br><br>திரு. நவாலியூர்<br>நா. சச்சிதானந்தன் |



நிர்வாகி:-
திரு. சு. நீதி நேசன்

துணை நிர்வாகி:-
திரு. பரசுராமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஞான அறிவுச் சுடர் சஞ்சிகையின் நிர்வாகிகள், எழுத்தாளர்கள் ஆகியவர்களை வாசகர்களுக்கு அறியத் தருவது எமது கடமை

1. ஆன்மிகம்
கலாபூஷணம்
**குமாரசாமி சோமசுந்தரம்**

2. தமிழ் மரபு
பேராசிரியர்
**எஸ்.கே.சிவபாலன்**

3. இந்துமதக் கோட்பாடு
வித்துவான் - பண்டிதை
கலாபூஷணம்
**வசந்தா வைத்தியநாதன்**

5. திருக்குறள்
**திரு.சி.சிவநித்தானந்தா**
உதவி கல்விப்பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்,
திருகோணமலை

6. கம்பராமாயணம்
**கம்பவாரிதி திரு.ஜெயராஜ்**

7. சிறுவர் பகுதி
**திரு.மாஸ்டர் சிவலிங்கம்**
வானொலி மாமா

9. ஜோதிடம்
**ஜோதிட ஆய்வுக்குழுவினர்**

10. பொதுப்பகுதி
தமிழ் இலக்கிய எழுத்தாளர்
**திரு. என். சோமகாந்தன்**

11. பல்துறைப்பகுதி
எழுத்தாளர்
**திரு. நவாலியூர் சச்சிதானந்தன்**

4. முத்தமிழ் அரங்கம் (இயல்)
பண்ணிசை கலாநிதி
சங்கீத வித்துவான்
**திரு.எஸ்.கே.சிவபாலன்**

4. முத்தமிழ் அரங்கம் (இசை)
**திரு.டப்ளியு.எஸ். செந்தில்நாதன்**
சட்டத்தரணி

4. முத்தமிழ் அரங்கம் (நாடகம்)
**திருமதி. பிரகதாதில்லை நடராஜன்**
நடன ஆசிரியை

8. மருத்துவம் (சித்தஆயுள் வேதம்)
சித்த வைத்திய கலாநிதி
Dr. **அல்போன்ஸ் அத்தினாசியர்**
சில்லாலை

8. மருத்துவம் (அலோபதி/ஆங்கிலம்)
Dr. **என்.கே.முருகானந்தன**
M.B.B.S. (Cey), D. Ac (S.L)

8. மருத்துவம் (ஹோமியோபதி)
Dr. **என்.வி.தில்லைச்சந்திரன்**
அரசாங்க பதிவு பெற்ற
ஹோமியோபதி வைத்தியர்)

**நிர்வாகி : திரு. சு. நிதிநேசன்**

**நிர்வாக ஆசிரியர் : திரு. ப. பரசுராமன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமையும் புதுமையும்

நமது முன்னோரது இலக்கியங்களை பார்த்தோமானால் வாழ்த்து என்னும் பழமுதுபெரும் சொல்லை எங்கும் காணலாம். வாழ்த்து முதற்கண் இறைவனையும், அதன்சால் இயற்கையும் சக உயிரினங்களையும் மனிதன் வாழ்த்துவது போலாகும். இது மனிதனது அற்புதமான மனப்போக்கும், எல்லோரும் நன்றாக இருக்க வேண்மென்ற மனப்பாங்குமாகும்.

"எல்லோரும் இன்புற்றிருப்பதை யான் அறிவேன் பராபரமே!" – தாயுமானவர்

நாளடைவில் வாழ்த்து என்பது குட்மார்னிங் (Good Morning) என்று மாறியது. அதாவது இன்றைய பொழுது நல்லபொழுதாக அமைய ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளும் முகமன்தான் குட்மார்னிங்.

ஆனால் இவையெல்லாம் இன்று நடைமுறையில் இருக்கிறதா? என்று பார்த்தால் கேள்விக்குறிதான். காலையில் எழுந்திருக்கும் போதே டென்ஷன். எழுந்தவுடனேயே ஆ! நேரமாகிவிட்டதே!! சரியான நேரத்திற்கெல்லாம் நடக்குமோ? என நினைத்தல். "குழந்தையை பள்ளிக்கு நேரத்திற்கனுப்பமுடியுமா? நான் ஆபிஸூக்கு நேரத்துக்குப் போகமுடியுமா? இப்படியான பரபரப்பு. அதனால் ஏற்படும் டென்ஷன் உடலை, மனதைப் பாதிப்பதோடு அமைதியின்மை, மற்றவரோடு அன்பின்மை ஆகியவற்றை உருவாக்குகின்ற இக்காலகட்டத்தில் மனிதனுக்குத் தேவையானதும், அற்புதமான ஒன்றை "ஞானா பப்ளிகேஷன்" வெளிக்காட்டியுள்ளது. அதுவே ஞான அறிவுச்சுடரெனும் மாதாந்த சஞ்சிகையாகும். இச்சஞ்சிகை 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் [April] மாதம் தொடக்கம் வெளிவரும் சஞ்சிகையானது நவாம்சங்களை உள்ளடக்கியதாக, ஆன்மிகம், தமிழ் மரபு, இந்துமதக் கோட்பாடு, முத்தமிழ் அரங்கம், திருக்குறள், கம்பராமாயணம், சிறுவர் பகுதி, மருத்துவம், ஜோதிடம் அத்தோடு பொதுப்பகுதி, பல்துறைப்பகுதி ஆகியவற்றை உள்ளடக்கியதாக மாதாமாதம் மலர்கின்றது. அதனை வாசகர்களாகிய நீங்கள் வாசித்துப் பயன்பெறுவீர்களாக! அதிலுள்ள பொருளடக்கம் மேற்கூறிய தற்கால வாழ்க்கை முறையில் ஒரு திருப்பத்தை உங்களுக்கு ஏற்படுத்துவதோடு மாத்திரமல்லாது உங்களது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கும் பொருத்தமான அம்சங்களை உள்ளடக்கியருப்பதால் முழுக்குடும்பமும் பயன்பெறும் என்பதில் ஐயமில்லை.

ஆதலால், வாழ்வின் அமைதியை உணர்வதோடு முற்காலத்திலிருந்த வாழ்த்து (குட்மார்னிங்) எமது வாழ்வில் இடம்பெற்று நாங்களும் சந்தோஷம் அடைவதோடு மற்றவரது சந்தோஷத்திலும் இன்பம் பெறுவோமாக. இது ஒரு காந்தசக்தி அலையாகப் பெருகி, மனித சமுதாயம் பயன்பெறுவதோடு எமது தாய்மொழியின் தார்ப்பரியத்தை எல்லோர்க்கும் உணர்த்துவோமாக!

.வாழ்த்துவோம்!

நாமும் வாழ்வோம்!!

அனைவரும் வாழப் பிரார்த்திப்போமாக!!!

**ஞான அறிவுச்சுடர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஞான அறிவுச்சுடர்

ஆன்மீகம்: தார்மீகம்: தெய்வீகம்:

ஞானா பப்ளிகேஷன்
வெளியீடு
மாதாந்த சஞ்சிகை

ஆண்டு 1 இதழ் 1
2001ம் ஆண்டு
விக்கிரம - விக்ரம விஷு வருடம் ஏப்ரல் - மே
மாதத்திற்குரிய மாதாந்த சஞ்சிகை

## ஞான அறிவுச்சுடர்

இம்முதல் இதழானது ஏப்ரல்–மே [April-May]
ஆகிய இரு மாதங்களுக்கும் உரிய இதழாகும்.
அடுத்த இதழ் யூன் மாதத்திலிருந்து மாதா மாதம்
தொடர்ச்சியாக வெளிவரும் என்பதை
வாசகர்களுக்குப் பணிவன்புடன்
அறியத் தருகிறோம்.

இதழ் பற்றிய உங்கள் எண்ணங்களை
கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
அடுத்துவரும் இதழில் வாசகர்
பகுதியில் பிரசுரிக்கப்படும்.

## இம்மலரின் உள்ளடக்கங்கள்

| | பக்கம் |
|---|---|
| முத்திரையும் - ஆசிரியர் குழுவும் | 1 |
| பழமையும் புதுமையும் | 2 |
| சஞ்சிகையின் பொருடக்கம் | 3 |
| 2001ம் ஆண்டு தமிழ்ப் புதுவருடம் | 4 |
| அருளாசிச் செய்தி | |
| நல்லை திருஞானசம்பந்த ஆதின முதல்வர் | 5 |
| தென்னிந்திய திருச்சபைப் பேராயர் | 6 |
| இலங்கை இராமகிருஷ்ணமிசன் தலைவர் | 7 |
| வீண்பயத்தை ஒழிப்போம் உண்மைப் பக்தி வளர்ப்போம் | 8 |
| பொன்னம்பல வாணேஸ்வரர் கோயில் வரலாறு | 9-10 |

**நவாம்சங்கள்**

| | |
|---|---|
| 1. ஆன்மீகம் | 11-12-13 2. |
| தமிழ் மரபு | 14-15 |
| 3. இந்துமதக்கோட்பாடு | 15-16 |
| 4. முத்தமிழ் அரங்கம் (இயல், இசை, நாடகம்) | 17-18-19-20 |
| 5. திருக்குறள் | 21-22 |
| 6. கம்பராமாயணம் | 23-24 |
| 7. சிறுவர் பகுதி | 25-26 |
| கைவிளக்கு சிறுகதை | 27-28-29 |
| 8. மருத்துவம் - ஆங்கிலம் | 31-32-33 |
| சித்த ஆயுள் வேதம் | 30 |
| ஹோமியோபதி | 34 |
| 9. ஜோதிடம் | 35-36 |
| 10. பொதுப்பகுதி | 37 |
| 11. பல்சுவைப்பகுதி | 38-39 |
| 12. வேண்டுகோள் | 40 |

ஞான அறிவுச்சுடர் இம்மாதாந்தச் சஞ்சிகையில் வரும் கட்டுரைகளும் ஏனைய பகுதி ஆக்கங்களும் அவ்வப்பகுதி ஆசிரியருக்கே உரியது.

- இதழ் நடத்துனர் -

அனுப்பவேண்டிய முகவரி

**GNANA PUBLICATIONS,**
C/o: P. Parasuraman,
No. 4, 1st Floor, Fussels Lane,
Wellawatte, Colombo - 06
Contact Tel : 01 - 591644



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2001ம் ஆண்டு தமிழ் புதுவருடம் சிறக்க எண்ணுவோம்

விக்கிரம விஷூ புதுவருடம் பிறக்கிறது. ஒவ்வொரு வருடமும் இதுபோல புத்தாண்டு என அமைத்து நம்மைப் பற்றி நாமே ஆராய்ந்து கொள்ளத்தான் நம் முன்னோர்கள் இப்படி அமைத்திருக்கிறார்கள். பிறந்தோம், வளர்ந்தோம், இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என அனுபவித்தோம். வயதாயிற்று என நாட்கள் சென்று கொண்டே இருந்தால் என்ன பிரயோஜனம்? ஒவ்வொருவருக்கும் பிறந்தநாள் வருவதுபோல பிரம்மாண்டத்தில் நகர்ந்து கொண்டிருக்கும் பூமியும் நகர்ந்து செல்லும் ஆண்டுகளைப் புத்தாண்டு என்று சொல்கிறார்கள்.

இந்த அண்டத்தில் பிறந்தாயே, ஆண்டுகள் போகின்றனவே, இந்த உலகில் நீ என்ன கற்றுக் கொண்டாய்? கணக்குப் பார், உன் வாழ்க்கையில் என்ன உணர்ந்து கொண்டாய் என்ற சிந்திக்கச் சொல்கிறது புத்தாண்டு. ஒவ்வொருவரும் தனித்தனியே பிறந்தநாள் போல காலத்திற்கும் பிறந்த நாள் புத்தாண்டு.

அதனால் தான் அன்றைக்குக் கசப்பும், இனிப்பும், புளிப்பும் கொண்ட பச்சடியை அளித்து வாழ்வும் இப்படித்தான் இருக்கும், மகிழ்வோடு இரு! என்றார்கள் நம் பெரியோர்கள். கால வெள்ளத்தில் எல்லாம் வரும் வாழ்க்கையிலே, அடிநாதமாக இருக்கும் மன அமைதியை மட்டும் என்றுமே இழந்துவிடக் கூடாது. அதற்குப் பெரிதும் துணை செய்வது இறைவனின் மேல் நாம் வைக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை. அவனை இறுகப் பிடித்துக்கொண்டால், எத்தனை கெடுதல்கள் வந்தாலும் மன அமைதி கெடுவதில்லை.

கெடுதல்கள் மட்டுமல்ல, அதிகமான மகிழ்ச்சி, உயர்வு, பதவி இவைகள் கூட நம்மைத் தடுமாற வைக்கும். துன்பங்களாவது நம்மை நின்று நிதானிக்க வைத்து அனுபவம் சொல்லும். ஆனால், இன்பமும், பாராட்டுக்களும் நம் கண்ணை மறைத்துவிடும். மனதைத் தடுமாறச் செய்யும். இன்னும் கேட்கப்போனால் துன்பம் வரும் வேளையை விட இன்பம் வரும் வேளையில்தான் இன்னும் அதிகமாக இறைவனை நினைக்க வேண்டும்.

இவை அனைத்தும் நீ தந்தது. உனக்கே சமர்ப்பணம் என சரணாகதி அடைந்து விட்டால் மனம் கர்வம், அகங்காரம் கொள்ளாது, எப்போதும் அமைதியாக இருக்கும்.

*அமைதி எல்லாவித வெற்றிகளையும் நமக்கு அருளும்!*

விக்கிரம விஷூஆண்டு நமக்கு இறைவனின் பால் அதிக அன்பையும், பக்தியையும், பணிவையும் கொண்டு வரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் : ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்



ஆதீன முதல்வர் : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

தொலைபேசி : 2~~4018~~ 2870

நல்லூர், யாழ்ப்பாணம்
இலங்கை

# அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர் !

ஞான அறிவுச்சுடர் என்னும் சஞ்சிகை வெளிவருவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகிறோம். இந்நாட்டிற் பலசஞ்சிகைகள் வெளியாகிக்கொண்டிருக்கும் இக்காலத்தில் ஞானத்தையும் அறிவையும் ஒன்றாக இணைத்து ஒன்பது விடயங்களைத் தாங்கிச் சிந்தனையையும் செயலையும் நெறிப்படுத்தும் வகையில், விஞ்ஞானம் வளர்ந்திருக்கும் இக்காலத்தில் மெய்ஞ்ஞானத்தின் மூலமாகச் சமயத்தை வாழ்க்கைக்குரியதாக ஆக்கித்தரும் விடயங்களாக ஆன்மீகம், தமிழ்மரபு, இந்துமதக்கோட்பாடு, முத்தமிழ்அரங்கம் திருக்குறள், கம்பராமாயணம், சிறுவர் பகுதி, மருத்துவம், சோதிடம் இவ்வகையாக நவாம்சங்களாகக் கொண்டு இச்சஞ்சிகை வெளிவருவது ஆன்மிகப் பசியில் தத்தளித்துக்கொண்டிருக்கும் இளையதலை முறையினர்க்குப் பெருவிருந்தாக அமைகின்றது. இச்சஞ்சிகையின் "லோகோ" அமைந்துள்ள முறை எல்லோரது மனதையும் கவர்ந்துள்ளது. இச்சஞ்சிகையின் தாரக மந்திரம் "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்பதாகும். இச்சஞ்சிகை மனிதன் வாழுகின்ற முறைகளைச் சுமந்துவரப்போகின்றது, என்பதை வெளிக்காட்டுகின்றது. இந்நூல் நிர்வாகியான சு. நீதிநேசன் அவர்கள் கற்பனைச்சிற்பியாவார். இருக்கின்ற இடத்தில் இருந்து தன்னுடைய செயல் மூலமாகத் தானும் வாழ்ந்து மற்றவரையும் வாழவைக்கின்ற செயல் வீரன். இவர் எடுக்கின்ற நன் முயற்சியால், புதிய நூற்றாண்டிற் சிந்தித்துச் செயற்பட வெளிவரும் இச்சஞ்சிகை எல்லோருக்கும் பயனுள்ளதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

வாழ்க ஞானஅறிவுச்சுடர்! வளர்க இவர்கள் பணி!!

என்றும் வேண்டும் இன்ப அன்பு.



குருமஹாசந்நிதானம்

**ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA DIOCESE OF THE CHURCH OF SOUTH INDIA

(INAUGURATED – 1947 )

(AMERICAN CEYLON MISSION, FOUNDED IN 1816 )

(Established 1816)

**The Rt.Rev.Dr.S.Jebanesan,**
*Bishop in Jaffna*
*Tele: 0094 /(0)75511233*
*Fax : 00941/ 584836*

*Bishop's Office,*
*39,Fussels Lane,*
*Colombo – 06*
*SriLanka*


❑ நவ – அம்சங்களை உள்ளடக்கியதாக ஞான அறிவுச்சுடர் வெளிவரப் போகின்றது என்றறிந்து பெருமகிழ்ச்சியடைந்தேன். அவசரமும் கழுத்தறுப்புப் போட்டிகளும் மலிந்துவிட்ட உலகில் ஆன்மிகத்தை வளர்க்க முற்பட்டிருக்கும் இவர்களை நாம் பாராட்டி ஊக்கமளிக்க வேண்டும்.

❑ டேல், கானாகி, நோர்மன் வின்சன்ற் பில் முதலிய பெரும் உளவியலாளர்கள் ஆன்மிக உண்மைமட்டுமல்ல சகல ரோகங்களையும் தீர்க்கும் சஞ்சீவி என்று அனுபவரீதியாக குறிப்பிட்டிருக்கின்றனர்.

❑ மனிதன் கவலையைத் தீர்க்க மதுவையும், கணிகையரையும், போதைவஸ்துக்களையும் நாடுகின்றான். அங்கு அவனின் கவலைகள் தீருவதில்லை. மாறாகத் தன் உடலையே கெடுத்துக் கொள்கின்றான்.

❑ ஆன்மிகவாதி எப்பொழுதும் குதூகலமாக இருக்கின்றான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ்ப் புலவன் இதைச் தெளிவாக எழுதிவைத்தான்.
"தனக்குவமை இல்லாதவன் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது." இது எவ்வளவு உண்மை.

❑ தமிழ் மக்களை ஆன்மிகத்தின்பால் திருப்ப முனையும் இச் சஞ்சிகையின் குழுவினருக்கு எனது நல்வாழ்த்துக்கள். திரு. சு. நீதிநேசன் எனது மாணவர். அவர் இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு நான் பெருமிதமடைகின்றேன் அவருடைய முயற்சி வெற்றியளிக்க இறைவன் அருள்பாலிப்பானாக.



தென்னிந்திய திருச்சபை பேராயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
*Ceylon Branch*
*40, Ramakrishna Road, Colombo 6*

*Phone: 588253*
*075 513805*
*Email: rkm@eureka.lk*

# வாழ்த்துச் செய்தி

புதியதாக வெளிவரும் 'ஞான அறிவுச்சுடர்' என்னும் மாத சஞ்சிகைக்கு இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஒருவனது இன்ப, துன்பங்களுக்கு அவனது மனதே காரணம். மனதைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவனுக்கு, அம்மனது அவனது நண்பனாக இருந்து அவனை நல்வழிப்படுத்துகிறது. கட்டுப்பாடுட்டில் இல்லாத மனது ஒருவனைத் துயரத்திற்கு உள்ளாக்குகிறது.

மனக்கட்டுப்பாடு என்பது மனத்தூய்மையையும் குறிக்கும். மனத்தூய்மைக்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் 'நல்ல நூல்களை ஓதுதலும் அடங்கும். இது வாழ்நாள் முழுதும் செய்யவேண்டிய ஓர்நற்காரியம். எனவே தான், 'ஸ்வாத்யாயாத் மா ப்ரமத' ('ஓதுதல் ஒளியே') என்று கூறுகிறது நமது வேதம். 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' என்கிறாள் ஔவைப்பாட்டி. 'தஸ்மாத் சாஸ்திரம் ப்ரமாணதே' ('எனவே வாழ்க்கை உனக்கு சாஸ்திரம் வரிகாட்டியாக அமையட்டும்') என்பது ஸ்ரீமத் பகவத்கீதை.

மேற்கூறிய கருத்துக்கள் தினசரி நல்ல நூல்களை வாசிக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டுகின்றன.

இன்று பொழுது போக்கு சாதனங்களை ஒன்றாக, நாவல்களும், வார, மாத, இதழகளும் மிகுந்து மக்களை அடிமைப்படுத்தி வருவதை காண்கின்றோம். இதற்கு மாற்று ஈடாக அறிவுள்ள, மனிதனை கவரகூடிய வகையில் அமைந்த சஞ்சிகைகள் வெளிப்பட வேண்டும் எனக கூறதேவையில்லை.

காலத்தின் இத்தேவையை உணர்ந்து திரு. சு. நீதிநேசன் அவர்களும் அவரைசார்ந்தோரும் மதிநுட்பம் வாய்ந்த எழுத்தாளர்களும் மேற்கொண்டுள்ள முயற்சி உண்மையில் பாராட்டதக்கது.

பல கற்றிந்த அறிஞர்களின் உதவியோடு ஒன்பது சிறப்பம்சங்களை கொண்டதாக இம் மலரை வெளியிடுகின்றனர். இம் மலரை அனைவரும் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

இறைவன் திருவருளால் 'ஞான அறிவுச்சுடர்' ஒளிவிட்டு பிரகாசிக்க பிராத்திக்கிறோம்.

திரு.சு. நீதிநேசன் அவர்களுக்கு எங்களது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறோம்.



முதல்வர் கையெழுத்து

இலங்கை இராமகிருஷ்ணமிஷன் முதல்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீண் பயத்தை ஒழிப்போம்! உண்மை பக்தி வளர்ப்போம்!

அன்பர்களே!

நமது சமயம் மிகத்தொன்மையானது. எண்ணங்களுக்குள்ளும். வார்த்தைகளுக்குள்ளும் அடங்காத எமது இறைவழிபாடு முறைகளையும் அறிதற்கான பல அருள் நூல்களை நம் சமயச் சான்றோர் கருணையால் நமக்கு அளித்துள்ளனர். அவர்களின் வழிகாட்டலால் இறைவழிபாடு பற்றி நம் சமயத்தார்க்கு தெளிவுபட்ட ஓர் வழிபாட்டு முறை உண்டு.

அண்மைக்காலமாக சிலர் இவ்வுண்மையை உணராது, மதமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு உலகியல் வெற்றி நோக்கி முயலும் சில மதத்தாரைப் பின்பற்றி இறைவழிபாட்டில் குறுக்குவழிகளைக் கையாளத் தலைப்படுகின்றனர். இம்முயற்சி மிக்க வருந்துவதற்குரியது.

"திருப்பதி வெங்கடாசலபதி மகிமை", "ஸ்ரீ ஆஞ்சனேயர் சுவாமி மகிமை" போன்ற தலைப்புக்களில் துண்டுப் பிரசுரங்களைத் தயாரித்துத் தனிப்பட்டவர்களுக்கு அனுப்புவதும், ஆலயங்களில் விநியோகிப்பதுமாக சிலர் வீண் முயற்சி செய்து வருகின்றனர். இத்துண்டுப் பிரசுரங்களில், அதேபோன்ற ஆயிரக் கணக்கில் துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு விநியோகிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறது. அங்ஙனம் செய்யாவிடின் பல தீமைகள் விளையலாமென்று மிரட்டலும் வேறு விடப்படுகின்றது. இது பயம்காட்டி இறைவனை வழிபடச் செய்யும் வழியாகும்.

இவையெல்லாம் நம் சமயம் காட்டும் வழிமுறைக்குப் பொருந்தாத விடயங்கள் என்பதை அன்பர்கள் உணரவேண்டும். "பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்தவன்" நம் இறைவன் எனும் உண்மை அறியாத பாமர மக்கள் பலர் இத்துண்டுப்பிரசுரங்களால் தேவையற்றுப் பீதியடைவதோடு, பக்தியினாலன்றி பயத்தினால் இறைவனை வழிபடத் தலைப்படுகின்றனர். இச்செயல்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை.

தயவுகூர்ந்து தேவையற்ற, அநாகரிகமான, நம் சமயத்துக்குப் பொருந்தாத இத்தகைய துண்டுப்பிரசுரங்களை அச்சிடும் முயற்சிகளை விடுத்து மக்களை உய்விக்கக்கூடியதும் பயனுள்ளதுமான சிறு சிறு அருள் நூல்களை அச்சிட்டு வெளியிட்டால், அவ் அருள் நூல்கள் பக்தர்களுக்கு உண்மைப் பக்தியையும், தெய்வ மகிமையையும் விளங்கச் செய்து அவர்களைச் சரியான பாதையில் வளர்த்தெடுக்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய நல்ல முயற்சிக்குத் துணைசெய்யும் முகமாக சிறு அருள் நூல்களைக் கைக்கடக்கமான முறையில் வெளியிடும் முயற்சியில் ஈடுபடும் அன்பர்களுக்கு எமது ஞான சஞ்சிகை உதவிக்கரம் நீட்ட முன்வருகிறது. இத்தகைய சிறு நூல்களை வெளியிட விரும்பும் அன்பர்கள் எம்மோடு தொடர்பு கொண்டால் அந்நூல்களை அச்சிடும் செலவின் ஒரு பகுதியை ஞான அறிவச்சுடர் விற்பனையால் வரும் இலாபத்திலிருந்து தந்து உதவ எமது ஞானா பப்ளிகேசன் முன்வரும்.

இந்நற்காரியத்திலிறங்க எமது வாசகர்களை வேண்டி நிற்கிறோம்.

"பயத்தை விடுத்து பக்தி வளர்ப்போம்"

"தெய்வம் நமக்கு துணை பாப்பா!
என்றும் அவர் தீங்கு தரமாட்டாரடி பாப்பா!"

நன்றி!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம்

1800 ஆம் ஆண்டுகளில் கொழும்பு மாநகரில் சைவப் பெருமக்களின் வழிபாட்டிற்காக ஒரு சிவாலயம் மிக அவசியமானது என எல்லோரும் கருதினர். இதே காலத்தில் கொழும்பில் வாழ்ந்த சிவ பக்தனான ஸ்ரீமான் பொன்னம்பல முதலியார் அவர்களும் தமது சிந்தனையில் இதனைக் கொண்டிருந்தார். முதலியார் அவர்கள் தமது இல்லத்தில் அம்பாள் யந்திரத்தையும் வைத்திருந்து தினமும் பூஜை வழிபாடுகளை மேற்கொண்டு வந்தார். இக்காலகட்டத்தில் முதலியார் அவர்கள் தமது குடும்ப சகிதம் இராமேஸ்வரம் திருப்பதிக்கு யாத்திரை மேற்கொண்டார். அவ்வேளையில் தமக்கு ஓர் ஆண்மகனைத் தந்தருளும் படி இராமேஸ்வரப் பெருமானிடம் விண்ணப்பஞ் செய்தார்

ஸ்ரீமான் பொன்னம்பல முதலியார் அவர்களின் பிராத்தனைகள், வழிபாடுகளால் அவருக்கு ஆண் குழந்தை ஒன்று கிடைத்தது. அப்பிள்ளைக்கு இராமநாதன் எனப் பெயர்சூட்டினார். இவ்வேளையில் முதலியார் அவர்கள் பூஜித்து வரும் அம்பாள் யந்திரத்தை வைத்து ஒரு சிவாலயம் அமைக்கும் படி ஒரு கனவையும் கண்டார். அதற்கமைய அவர் ஒரு சிவாலயம் அமைக்ககச் சித்தங் கொண்டார்.

ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம் அமைந்துள்ள காணியை விலைக்கு வாங்கிச் சிவாலயத்தை அமைத்தார். 1857 ஆம் ஆண்டு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரருக்கு கும்பாபிஷேகம் அதிவிமர்சையாக நடைபெற்றது. ஸ்ரீமான் முதலியார், சிவனடியார்கள் எல்லோரும் அகமகிழ்ந்தனர். ஸ்ரீமான் இராமநாதமுதலியார் அவர்களும் தந்தையாரைப் போலவே இந்தியத்தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்வது வழக்கம். அங்குள்ள சிவாலயங்களைப் போன்ற சிவாலயங்கள் இலங்கையில் அனுராதபுரம், பொலன்னறுவைப் பகுதிகளிள் இருந்து, அந்நியரால் அழிக்கப்பட்டமையை நினைத்து மனம் நொந்தார். தமது தகப்பனாரின் பொன்னம்பலவாணேஸ்வரத்தை இந்தியக் கோவில்களைப் போல மாபெரும் சிவாலயமாக அமைக்கச் சித்தங் கொண்டார்.

இதற்கான ஆலோசனைகளை உரிய முறையிற் பெற்ற இராமநாத முதலியார் அவர்கள் இந்தியச் சிற்பாசாரியர்கள், சிற்பக்கலைஞரை வரவழைத்தார். தேவையான கருங்கற்கள் வருவிக்கப்பட்டன. 1905 இல் கட்டிடவேலைகள் ஆரம்பமாயின. நாம் இப்பொது கண்டு, வணங்கி மகிழும் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர ஆலயம் அமைக்கப்பட்டு 1917 ஆம் ஆண்டு ஸ்ரீமான் இராமநாத முதலியார் அவர்களால் மஹா கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது. காலாகாலத்தில் வேண்டிய சிறு சிறு திருத்த வேலைப்பாடுகள் புனரமைப்புக்கள் என்பனவற்றுடன் 12 வருடத்திற்கு ஒரு முறை சிவாகம முறைகளுக்கு அமைய இவ்வாலயத்தில் கும்பாபிஷேகங்கள் நடைபெற்று வருகின்றது. 1999–06–23 ஆந் திகதி நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் ஸ்ரீ மாரி அம்மன், ஸ்ரீ ஆஞ்சனேயர் ஆகிய மூர்த்திகள் இரண்டாம் வீதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். மேற்கு வாயிற் புதிய கோபுரம் அமைத்து சுபவேளையில் கும்பாபிஷேகஞ் செய்யப்பட்டது. இம் மஹா கும்பாபிஷேகத்தை இத்தேவஸ்தானத்தில் 50 வருட சிவாசார்யப்பணியில் இருக்கும் சைவ சித்தாந்த பிரதிஷ்டா சக்கரவர்த்தி சிவஸ்ரீ. சி. குஞ்சிதபாதக் குருக்கள் மூன்றாவது தடவையாகத் தலைமை தாங்கிச் செய்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. இக்கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக இந்திய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.பி. சபாரத் தினம் அவர்களும் திருக்கழுக்குன்றம் சிவாகம சாஸ்திர சக்கரவர்த்தி பேராசிரியர் சிவஸ்ரீ டி.சி. தியாகராஜ சிவாசார்யர் அவர்கள் சர்வசாதகமாகவும் இந்திய சிற்பாகம வித்துவான், ஓய்வுபெற்ற மாமல்லபுர அரச கட்டிட அதிபர் கலாநிதி வி. கணபதி ஸ்தபதி அவர்களும் தேவையான ஆலோசனைகளை நல்கியமை போற்றுதற்குரியது.

ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம் நிலம், சுவர், தூண் மேற்பாகம் எல்லாமே கருங்கல்லினால் ஆனது. சுமார் 300க்கு மேற்பட்ட பென்னம் பெரிய கற்றூண்கள் இங்கே உள. அவை ஒன்று, இரண்டு, மூன்று முகங்களைச் கொண்டவை. தூண்களில் மூர்த்திகள் செதுக்கப்பட்டு உள்ளனர். மரம், செடி, கொடி. எல்லாமே செதுக்கல் வேலைகளின் மகத்துவத்தைக் காட்டுகின்றன. சிங்கம், யானை, கிளி, மயில் முதலியவை கூட சிற்பாச்சாரிகளின் கை வண்ணத்தைக் காட்டுகின்றன. இதனை ஒரு கற்றழி என்றும் கற்கூடம் எனயும் அழைக்கலாம். இத்தேவஸ்தானத்தின் மூலவர் சிவலிங்கம் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் அம்பாள், ஸ்ரீ சிவகாம சௌந்தரி. ஸ்ரீ நடராசர், பிள்ளையார், சோமஸ்கந்தர், பஞசலிங்கம், ஸ்ரீ விஷ்னு, முருகள், ஷண்முகர், வைரவர், சுவர்ணபைரவர், மாரி அம்மன் ஆஞசனேயர், நவக்கிரகம், சண்டேஸ்வரர் முதலான மூர்த்திகள் உள்ள கோஷ்டத்தில் நர்த்தன விநாயகர், அவரின் முன் சனீஸ்வரர், ஸ்ரீ தட்க்ஷனாமூர்த்தி, சநதான கோபாலர், லிங்கோற்பவர், பிரம்மா, சிவதுர்க்கை ஆகியோரும் உள்ளனர்.

தினமும் ஆறு காலப்பூஜைகள் வேளா வேளை தவறாமல் நடைபெறுகின்றன. காலை 7.00, மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.00 மணி பூஜையில் நித்திய அக்கினி, நித்திய உற்சவம் என்பன சிறப்புடன் நடைபெற்று வருகின்றன பங்குனி உத்தரத்தை அந்தமாகக் கொண்டு மஹோற்சவம் நடைபெறுகின்றது ஆடிப்பூரத்தை அந்தமாக் கொண்டு அம்பாள் உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது இலங்கையில் ஸ்ரீ ருத்ரமஹாயாகம் நடைபெற்ற சிவத்தலமும் இதுவே ஆகும். கிரகதோஷ நிவர்த்திக்கான வழிபாடுகள் வேண்டுதல் வழிபாடுகள், இஷ்ட சித்தி வழிபாடுகள் எல்லாம் பக்தர்களாற் கிரமானுகூலமாக இவ்வாலயத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதனால் அவர்கள் ஈசனின் அருட்கடாக்ஷத்தைப் பெற்றவர்கள் ஆகின்றனர்.

நித்திய நைமித்தியக் கிரியைகள் வழுவாது சிறப்பாக நடைபெறுவதால் மூர்த்திகரம் மேலோங்கி வருகின்றது. அதற்கமைய அடியார்கள் வேண்டுதலும் இனிதே நிறைவேறுகின்றது. பல்வகைச் சிறப்புக்களைக் கொண்ட ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர பெருமானை வணங்கி நற்பேறு பெறுவோமாக!

தென்னாருடைய சிவனே போற்றி

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

ஆக்கம்:- **இந்து வித்யாநிதி பிரம்மஸ்ரீ. சோ. குஹானந்த சர்மா**

## ஆலயத்தின் சிறப்புகள்

### கலையம்சம்

இலங்கையில் முற்றிலும் கருங்கல்லிலான சிவாலயம் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரமே என்றால் மிகையாகாது. ஆலயத்தில் நிலம், சுவர், தூன், கூரை எல்லாம் கருங்கல்லினாலானவை. ஆதியில் இவ்வாலயத்தை கற்றழி எனப் புகழுவாரும் உளர்.

### பூந்தோட்டம்

கோயிலுக்குத் தேவையான புஷ்பங்கள் பெறக்கூடியதாகவும் விதிமுறைக்கு ஏற்பப் புஷ்பங்கள் அமைந்திருத்தலோடு, வீதியின் புனிதத் தன்மை எல்லோரையும் கவரும் ஒழுங்கு கொண்டதாக அமைந்துள்ளது.

### மாட்டுத் தொழுவம்

எந்த ஆலயத்திலும் இல்லாத பெருஞ் சிறப்பு இவ் வாலயத்தில் அமைந்துள்ளது ஆவினத் தொழுவம். எமது மதத்தில் ஆ இனத்துக்கு எவ்வளவு முக்கியம் என்பது எல்லோரும் அறிந்ததே. இவ்வாலயத்திற்கு செல்லுங்கால் ஆ இனக் கூட்டத்தை காணும் பொழுது தன்னகத்தே ஒரு மகிழ்ச்சியும், லக்ஷ்மிகரமும் மனிதனுக்கு ஏற்படுகிறது.

### ஆலயமூர்த்திகள்

ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர ஆலயம் லிங்கமூர்த்தி, அதிபிரகாசம் பொருந்தியதோடு மக்களின் மனதைக் கவருகிறது. அதே நேரத்தில் அங்கு அமைந்திருக்கும் அம்பாள் சிவகாமசுந்தரியின் தோற்றம் எழில்மிகு தோற்றமாகத் தோன்றுகிறது. அத்தோடு விநாயகர் வடிவம் அதற்குரிய இடத்தில் அமைந்திருப்பதும் மிகச் சிறந்ததாகவும் மற்றும் எல்லா மூர்த்திகளும் தகுந்த இடங்களில் அமைக்கப்பெற்றுள்ளதோடு தெட்சணாமூர்த்தி, நவக்கிரக குடும்பம் ஆகியனவும் ஆலயத்தின் வாயிலை அண்மித்த உட்பகுதியில் சூரிய சந்திர தரிசனம் மிகையான தத்துவத்தைக்கொண்டதாக அமைந்துள்ளது. அத்தோடு அனுமான் துர்க்கை அம்மன் போன்ற விக்கிரகங்கள் இரண்டாம் வீதியில் அமையப்பெற்றுள்ளன. இவ்வாலய முன்வாசல் முகப்பில் அரச மரத்தடியில் அமைக்கப்பட்டிருக்கும் விநாயகர் எழில் மிகப் பெற்றதாகவும் உள்ளது. இந்து மதத்தின் அம்சம் தார்பாரியம் முழுமுதற்கடவுளாகிய விநாயகர் முதன்மையாக இருப்பது இக்கோவிலின் சிறப்பம்சமாகும்.

இவ்வாலயத்தில் சிவாகம முறைப்படி சுவாமி பள்ளியெழும் காட்சியும் காலை மூன்றுவேளையும் மாலை மூன்று வேளையும் பூஜைகள் நடைபெறுவது வழக்கம். பூஜைக்குரிய நெய்வேத்தியங்கள் அந்தந்தக் காலத்துக்குரியவை அந்தந்த வேளைகளிலேயே தயாரிக்கப்படுகின்றன.

இங்கு காலையும் மாலையும் நடைபெறும் நித்திய அக்கினி வளர்ப்பு எந்த ஒரு கோவிலிலும் நடைபெறுவதில்லை.

**முன் அட்டையில் தோன்றும்**

**பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் முகப்புத் தோற்றம், வாசல் கோபுரத்தினூடாக கோயில் கோபுரமும் அத்துடன் மூலஸ்தான ஒளிச்சுடரும் ஒருங்கே அமைய இவ்வர்ணப்படத்தைப் மிக ஆர்வத்துடன் கலையம்சம் பொருந்தப் படம்பிடித்துத் தந்த திருவாளர் றபேஷன் (ஸாயா ஸ்ரூடியோ) அவர்களுக்கு எமது நன்றி கலந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மிகம் அடிப்படை மனித உரிமை

ஆன்மீகம்

மனித வாழ்க்கை, ஏனைய உயிரினங்களின் வாழ்க்கையிலிருந்து வேறுபட்டது. உயர்திணையில் வைக்கப்பட்டுள்ள மனிதர், உயர்வான வாழ்க்கையை வாழ வேண்டும என்பது நியதி. மனிதர்கள் நிலையில் தாழ்ந்து விடுவது எப்போதெனில், அவர்கள் மனிதர்களாக வாழ மறுக்கும் போதும், மறக்கும் போதும் என்பதை நினைவிற்கொள்ளுதல் அவசியமாகும். மனிதர்கள் தம் நிலையிற் பிரிந்து, தாழ்வுறும் போதுதான் சமூகங்களில் குழப்பங்கள், வன்செயல்கள், அமைதியின்மை என்பன தோன்றுகின்றன.

பொதுவாக, எல்லோருக்குமே பிரச்சினைகள் உண்டு. ஆனால் பிரச்சினைகளின் ஆழ, அகலங்கள் ஆளுக்கு ஆள், சமூகத்துக்குச் சமூகம், நாட்டுக்கு நாடு வேறுபடலாம். பிரச்சினைகளை அப்படியே வைத்திருக்க விரும்புகிறவர்களும் உண்டு, அவற்றைத் தீர்க்க விரும்புகிறவர்களும் உண்டு. இதிலிருந்து பிறக்கும் கருத்தென்னவெனில், பிரச்சினைகளைக் கொண்டு பிழைப்பவர்களும் இருக்கிறார்கள், பிரச்சினைகளாற் துன்பப்படுபவர்களும் இருக்கிறார்கள். பிரச்சினைகள், சிலருக்கு இலாபங்களைத் தருகின்ற காரணத்தினாலேயே உலகிற் சமாதானம் குன்றியுள்ளது. சமாதானத்தைக் குலைப்பவர்கள் இவர்கள்.

பிச்சைக்காரன் தனது காலில் உள்ள புண்ணையோ, காயத்தையோ மாற்ற விரும்புவதில்லை. அதனால் அவனுக்கு இலாபம் உண்டு. புண்ணைக்காட்டிக் கூடுதலான பிச்சைப் பணத்தைப் பெற்றுக்கொள்கிறான். பிச்சைக்காரனைப் போன்றே பிரச்சினைகளைத் தொடவைத்துத் தமது சுய இலாபங்களைப் பெருக்கும் சுயநலமிகள் இன்றைய உலகில் அதிகரித்து வருகிறார்கள். மனிதரின் சுயநல நாட்டம் மற்றும் மனிதத்தன்மைகளை உதாசீனஞ்செய்தல் என்பன நீடிக்கும் வரை, சமாதானம் அடையப்படுதல் என்பது குதிரைக் கொம்பாகவே இருக்கும்.

பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமேயானால், அவற்றின் மூலகாரணங்களை அறிய வேண்டும். மனிதர்கள் மனிதத்தன்மைகளுடனான மனிதர்களாக வாழ மறுத்து வருவதே இன்றைய பிரச்சினைகள் யாவற்றிற்கும் மூல காரணமாகும். மனிதர்கள் உயர்வான, பண்பட்ட வாழ்க்கையை வாழுதல், அவர்களின் அடிப்படை மனித உரிமை. அவ்வாறு வாழாமல், தாழ்வான வாழ்க்கையை வாழத் தலைப்படுதல், மனித உரிமை மீறல் ஆகும்.

மனிதர்கள், உயர்வான வாழ்க்கை வாழாமைக்கு அவர்களிடம் வாழ்க்கைத் தத்துவம் என்று ஒன்று இல்லாமை முக்கிய காரணமாகும். இன்று பெரும்பாலானவர்கள் எப்படியாவது வாழ்ந்துவிட வேண்டும் என்று துடிக்கிறார்களே தவிர, வாழ்க்கைக்கு இலட்சியம் அமைத்து வாழ்வாங்கு வாழ வேண்டுமென்ற சிந்தனை சிறிதேனும் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

இன்றொரு சிந்தனை, நாளைக்கு அதை மாற்றிவிட்டு வேறொரு சிந்தனை, பேச்சு ஒன்று, செயல் இன்னொன்று ஆக உள்ளது. ஒன்றைச் சொல்லி விட்டு, அப்படிச் சொல்லவில்லையே என்று நாக்கூசாமல் அடித்துச்சொல்லும் பேர் வழிகளைக் காண்கின்றோம். எங்கும் எதிலும் திருகுதாளம், திருட்டுத்தனம், ஏமாற்றுவித்தை, மோசடி, நிதானமின்மை, பொய், புரட்டு, புரளி - இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். மனிதர்களுக்கு ஏன்தான் இப்படியான வக்கிரபுத்தி ஏற்படுகின்றதோ என்று விசனிக்கத் தோன்றுகிறது. நல்ல கனிகள் இருக்கத்தக்கதாகக் காய்களை ஏனோ கவர எத்தனிக்கிறார்கள் என்பது தான் புரியாத புதிராக உள்ளது.

வாழ்க்கைத் தத்துவம், வாழ்க்கை இலட்சியம், வாழ்க்கைக் குறிக்கோள் என மனிதர்களிடம் இருக்குமேயானால் இன்றைய உலகம் இத்துணை அவலத்திற்குத் தள்ளப்பட்டிருக்கமாட்டாது. "குறிக்கோள் இலாது கேட்டேன்" என்கிறார் ஓர் அருளாளர். ஒரு பிரயாணத்தை மேற்கொள்ள முன்னர், எங்கு நோக்கிச் செல்கிறோம், எவ்விடத்தை அடைய உள்ளோம் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுதல் இன்றியமையாததாகும். அல்லது சேர வேண்டிய இடத்தைச் சென்றடையாமல் வேறெங்காவது செல்ல நேரிடும். வாழ்க்கையும் ஒரு பயணமேயாகும். எனவே, குறிக்கோள் அவசியம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்க்கை செவ்வையாக நடத்தப்படுவதற்கு, செம்மையாக அமைவதற்கு, எமக்குக் குறிக்கோள்கள் தேவை. இக் குறிக்கோள்களை அமைத்துக்கொள்ளத் தத்துவம் வழிகாட்டுகிறது. வாழ்க்கைத் தத்துவம் என்பது மிகத் தொன்மையான காலத்திலிருந்தே வழிவழியாக வந்துள்ளது. பல பரீட்சைகள், சோதனைகளுக்கு முகங்கொடுத்து வெற்றிகரமாக வீறுநடைபோட்டு வந்துள்ளது. தத்துவம் என்பது உண்மை, உண்மைக்கு அழிவில்லை என்பது முடிந்த முடிவு. இந்த உண்மையை மூடி மறைக்க உலகத்தவர் முயல்கின்றனர். பொய்க்கு விழா எடுக்கின்றனர். மனிதர்களிடம் இத்துணை புத்தி, விவேகம் இருந்தும், பகுத்தறிவைக் கொண்டிருந்தும் என்ன பயன்? அவற்றையெல்லாம் பயன்படுத்தி உண்மையை உலகினின்றும் அகற்றப் பார்க்கிறார்கள் மனிதர்கள். இது நடக்காத காரியம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். உண்மை நிச்சயமாக ஒருநாள் வெளிவந்தே தீரும். ஏனென்றால், இந்த உலகத்தில் அழிக்க முடியாதது, ஒழிக்க முடியாதது, அகற்ற முடியாதது என்று ஒன்று இருக்குமானால், அது உண்மையேயாகும். உண்மையைத் தவிர வேறொன்றில்லை. உண்மையை மறைக்க முயல்வது எத்தனை அறிவீனம், மடமை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். உலகம் முழுவதும் தற்போது அமைதி, நிம்மதி, சாந்தி, ஆறுதல், பாதுகாப்பு இன்றித் தவிக்கிறது. காரணம் என்ன? விஞ்ஞான வளர்ச்சி என்கிறார்கள், தொழினுட்ப விருத்தி என்கிறார்கள். இது தவறு. பழியை வேறோரிடத்திற் போட்டுவிட்டுத் தாம் தப்பிக்கும் மனிதரின் முயற்சி. தவறு மனிதர்களிற்றான். விஞ்ஞானத்திலோ, தொழினுட்ப வளர்ச்சிகளிலோ அல்ல. இத்துணை புத்தியிருந்தும், விவேகமிருந்தும், பகுத்தறிவிருந்தும், உண்மையை மறந்துவிட்டார்கள் மானிடர். சத்தியத்தை, தர்மத்தை, விழுமியங்களைத் தங்கள் வாழ்க்கைத் தத்துவமாக்கத் தயங்குகிறார்கள் மனிதர்கள். இந்நிலைமையே உலகமாந்தர்களின் அவலங்களுக்கும் துன்பங்களுக்கும் காரணம். ஒவ்வொரு மனிதனின் உள்ளமும் தூய்மையாகி விட்டால் உலகம் தூய்மையாகிவிடும். உலகம் தூய்மையாகிவிட்டால் மனித அவலங்களும் துன்பங்களும் அகன்று விடும். மனித தத்துவத்தை வாழ்க்கையிலிருந்து அகற்றிவிட்ட மனிதர்கள் தாமும் நிம்மதியோடு வாழமாட்டார்கள்; ஏனையோரையும் நிம்மதியாக வாழ விடமாட்டார்கள். இந்தக்கூட்டத்தினரே இவ்வுலகிற் பெரும்பங்கினராக உள்ளனர். அவர்களின் மேலாண்மை உலகினை இன்று இழிநிலைக்குத் தள்ளியுள்ளது.

ஒவ்வொருவரும் நீதியை உபாசித்து, நீதியை வாழ்க்கைத் தத்துவமாகக் கொண்டு, நீதி வழி நடப்பதை, ஒழுகுதலை, வாழ்க்கைக் குறிக்கோளாக ஏற்று, நீதியையே அடைதலை வாழ்க்கை இலக்காகக்கொண்டு வாழ்ந்தால் ஆனந்தம் தவிர வேறு எதையுமே தரிசிக்க முடியாமல் போகும். ஆனந்தமயமாயிருக்கும் உலகிற் கவலை இருக்க நியாயமில்லை.

ஆனந்தமாக இருக்க வேண்டியது மனித இயல்பு. கவலை கொள்வது மனித இயல்பு அன்று. ஆனால் உலகில் இன்று எல்லாமே தலைகீழ்தான். வாழ்க்கையே அடிதலை மாறிய வாழ்க்கையாகிவிட்டது. மனிதரின் நடத்தைப் பிறழ்வுதான் இத்தகைய நிலையை ஏற்படுத்தியுள்ளது. மனிதர்கள் திசை மாறிய பறவைகளாகத், திக்குத் தெரியாத காட்டில் கண்ணை வேறு கட்டிக்கொண்டு அலைகின்ற பரிதாபநிலைக்கு யார் பொறுப்பு ? அந்த மனிதர்களே பொறுப்பு. ஆனாலும் ஒரு விமோசனம் இருக்கவே இருக்கிறது. மனிதர்கள் தங்கள் இயல்பு நிலையான ஆனந்தத்தை இழந்து விட்டு அல்லற்படுவதற்கு தாமே பொறுப்பு என்பதை உணர்ந்து கொள்வார்களேயானால் அந்தக்கணமே திருந்திக்கொள்வார்கள். "தீதும் நன்றும் பிறர்தர வரா" என்பது பழந்தமிழர் தந்த மகுடவாசகம். அது பொய்யில்லை. ஆனால் மனிதர்களுக்குத் தான் அதில் நம்பிக்கையில்லை. இந்த மனிதர்களை என்னவென்று சொல்வது! எவற்றில் நம்பிக்கை கொள்ள வேண்டுமோ, அவற்றில் நம்பிக்கை கொள்வதில்லை. எவற்றில் நம்பிக்கை வைக்கக்கூடாதோ, அவற்றில் நம்பிக்கை வைக்கிறார்கள்.

நீதியில், உண்மையில், தர்மத்தில், நேர்மையில் நம்பிக்கை வைப்பதாகத் தெரியவில்லை. அதே வேளை நிதியில், பொய்யில், நேர்மையீனத்தில் அபார நம்பிக்கை கொள்கிறார்கள். நீதியைக் குறுக்கி நிதி செய்கிறார்கள். அதாவது, நீதியற்ற, நெறியில்லா நெறியிற் சென்று நிதியைச் சம்பாதிக்கிறார்கள். எப்படி அந்த நிதி நிலைக்கும்? எவ்வாறு அந்த நிதி ஆனந்தத்தைத் தரும்? கவலையைத்தான் தரும். பிறரை அழவைத்துத் திரட்டிய பணம், சரியாகச் சொல்லப்போனால், திருடிய பணம் அவ்வாறு சேர்ந்தவனை அழவைத்துவிட்டு நீங்கிவிடும். இவ்வாறு திருவள்ளுவர் கூறுகிறார்.

மனிதரின் வாழ்க்கைத் தத்துவத்தில் நீதியும், நடுவு நிலைமையும், சத்தியமும், சாந்தமும், அன்பும், அஹிம்சையும் கட்டாயமாக இடம்பெற வேண்டும். மனித இதயம் நெல் வயல் போன்றது. களைகளையோ, புதர்களையோ அதில் விட்டுவைக்கக்கூடாது. அவற்றைக் களைந்து எறிந்துவிட வேண்டும். தீய எண்ணங்கள், அழுக்காறு, அவா, வெகுளி, அகந்தை, மமதை என்பன தான் களைகளாகவும் புதர்களாகவும் மனித உள்ளங்களில் மண்டிக்கிடக்கின்றன. அவையாவும் நீக்கப்படவேண்டும். உள்ளம் தூய்மையாக்கப்பட வேண்டும். தூய உள்ளம், அன்பினால், கரிசனையினால், கருணையினால் மனித நேயத்தினால் நிரப்பப்படவேண்டும். அங்கு நல்ல எண்ணங்கள், சிந்தனைகளை விதைக்கவேண்டும். அப்போது தான் மனிதகுலத்திற்கு விமோசனம் ஏற்பட வழிபிறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிக்கு மிக நெருக்கமாக மனிதர்கள் இருக்க வேண்டியது அவசியம். எத்தீங்கும் அவர்களை அணுகாது, நீதியை விட்டு மனிதர்கள் விலகிச் செல்லும் போதுதான், துன்பங்களும் துயரங்களும் அவர்களைத் துரத்திக்கொண்டு பின் தொடர்கின்றன.

நீதியே கடவுள், நீதியே செம்மையான பொருள், நீதியே உண்மையான பொருள். நீதியே நமக்கு எல்லாவித பாதுகாப்பையும் தரவல்லது. நீதியுடன் இணைந்தும், மிக நெருக்கமாகவும் நாம் இருக்கும் வரை எமக்கு ஒரு பொல்லாப்பும் இல்லை என்பது உறுதி. எனவே நீதியே எமது வாழ்வின் தத்துவமாக அமையவேண்டும்.

நீதியுடன் இணைவதற்கு அன்பினை வளர்த்துக் கொள்ள வேண்டும். அன்பு ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளார்ந்த நிலையில் இருக்கிறது. அன்பாக இருப்பது இரக்கம்கொள்வது, கருணை பூப்பது, தயைபுரிவது என்பன மனித இயல்புகள், மனிதத் தன்மைகள் ஆகும். இன்னும் சொல்லப் போனால் அவை மனித உரிமைகள். அன்பு என்பதைப் போற்றினால் மட்டும் போதாது, அன்பினைப் புகழ்பாடினால் மட்டும் போதாது.

நாம் எம்மிடம் உள்ள அன்பினைப் பலரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். பிறர்மீது நாம் கொள்ளுகின்ற கரிசனை குறைந்து வருகிறது. காரணம் என்ன? நாம் அன்பினைப்பகிர்ந்து கொள்ள முன்வராமை தான். ஏன் முன்வராமல் விடுகிறோம்? அதற்குக் காரணம் சுயநலம் தான்? தான் மட்டும் வாழ்ந்தால் போதும், மற்றவர்கள் எக்கேடு கெட்டால் தனக்கென்ன வந்துவிடப்போகிறது என்கின்ற மனிதத்தன்மையற்ற எண்ணமே சுயநலத்தை வீறு கொள்ளச் செய்கிறது. விறுவிறுப்பாக்குகிறது. பகைமையுணர்வை வளர்க்கிறது. பிறரை வெறுக்கச் செய்கிறது.

"அன்பிலார் எல்லாம் தமக்குடையர்" என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. அன்பு அற்றவன் சுயநலத்தின் ஒட்டு மொத்தம் ஆகின்றான். சுயநலத்தை வளர விட்டால், ஒருவனைச் சமூக விரோதி ஆக்கிவிடும். அத்தகைய சுயநலவாதி, இருகால் விலங்கு ஆகிறான். மிருக உணர்வுகள்தான் அவனில் மேலாதிக்கம் செலுத்துகின்றன.

அன்பினை வளர்த்துக் கொள்ளும்போது, கோபம், காமம், அவா, பொறாமை, செருக்கு, தற்பெருமை முதலிய களைகளையும் முட்புதர்களையும் வேரோடு கிள்ளி எறிந்து விடலாம். எந்த வித மிருக உணர்வுகளும், அசுரசக்திகளும் அன்பினை வளர்த்துக் கொள்பவரை அணுகமாட்டா. அன்பு என்னும் மகாசக்திக்கு எந்தத் தீயசக்தியையும் விரட்டி விடும் அபாரசக்தி உண்டு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அன்பினால் ஆகாதது ஒன்றில்லை. அதனால், எமது வாழ்க்கைத்தத்துவம், அன்புத்தத்துவமாக மலரவேண்டியது அவசியமாகும். எமது வாழ்க்கைக் குறிக்கோள்கள், அன்புத் தத்துவத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும். அவை அன்பு வழியில் அடையப்பட வேண்டும்.

எல்லோரிடமும் அன்பாயிரு, எவரையும் பழித்தோ, இழித்தோ உரைக்காதே; எவர் மனதையும் புண்படுத்தாதே, பிறர் மீது கரிசனைகொள்; யாரையும் ஏமாற்றாதே; யாரையும் வெறுக்காதே; எவர் மீதும் பொறாமை கொள்ளாதே; பிறர்க்குத் தீங்கு செய்யக் கனவிலும் எண்ணாதே. ஒவ்வொரு மனிதனும், இப்படிப்பட்ட நற்பண்புகள், நற்குணங்களை வளர்ந்து வந்தால் உலகில் அமைதி, நிம்மதி, சாந்தம் மகிழ்ச்சி என்பன நிரந்தரமாக நிலை பெற்று விடும்.

–கலாபூஷணம் குமாரசாமி சோமசுந்தரம் –

## குருவின் வழிகாட்டல்

ஒரு வீட்டின் முற்றத்தில் ஒரு குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. வெயிலில் தெரிந்த தனது நிழலைப் பிடிக்க அது முயற்சி செய்து பார்த்து, தோல்வியடைந்து, நிழலைப் பிடிக்க குழந்தை முன்னால் நகரும்போதெல்லாம் நிழலும் விலகிச் சென்றதால், குழந்தை ஏமாற்றமடைந்து அழ ஆரம்பித்தது.

குழந்தையின் அழுகைக்கான காரணத்தை அறிந்த தாய், அதன் வீண் முயற்சியை அதற்கு விளங்க வைக்க முடியவில்லை. அந்தச் சமயத்தில் அங்கு ஒரு சாது வந்தார். அவர் குழந்தை அழுவதன் காரணத்தைக் கேட்டறிந்து, "நான் குழந்தையைச் சமாதானப்படுத்துகிறேன்" என்றார். அவர் குழந்தையின் கையை எடுத்து அதன் தலைமீது வைத்தார். உடனே நிழலைப் பிடித்துவிட்டதாக நினைத்த குழந்தை மகிழ்ச்சியால் சிரித்தது.

இதைப் போலவே ஒரு குருவின் துணையுடனேயே நாம் அறிவைப் பெற்று அவரின் வழிகாட்டுதலுடன்தான் ஆன்மிக லட்சியத்தை அடைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மரபு

உலகின் மொழிவளம் மலிந்த நாடுகளுள் ஒன்றாக இந்தியா கருதப்படுகின்றது. பல்வேறு இனக்குழுக்களின், பண்பாடுகளின், மொழிக்குடும்பங்களின் சங்கமாக இன்நாடு திகழ்கின்றது. இந் நாட்டில் 1652க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் கணிப்பு நாள் தோறும் மாறிவருவதைக் காணலாம். புதிய புதிய மொழிகள் மொழி ஆய்வு தொடர்பான பணியின் போதும் கண்டுப்பிடிக்கப்பட்டு வரும் இன்றைய நிலையில் இந்த எண்ணிக்கை மேலும் உயர்வதற்குரிய வாய்ப்புக்கள் ஏராளமாக உள்ளன.

இந்திய மொழிக் குடும்பங்கள் பற்றிய தகவல்களும் நாளுக்கு நாள் மாறிக் கொண்டே வருகின்றன. தொடக்க நிலையில் இந்திய மொழிகள் அனைத்தும் வடமொழியிலிருந்து தோன்றியவை என்று தவறாகக் கணிக்கப்பட்டது. கல்கத்தாவிலுள்ள ஆசியக் கல்விச் சங்கத்தைத் தோற்றுவித்த (Asiatic Society) சேர் வில்லியம் ஜோன்ஸ் சமஸ்கிருதம் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தோடு தொடர்புடையதென்பதை 1786ல் நிலைநாட்டிய போது இந்திய மொழிகள் பற்றிய பழைய கண்ணோட்டங்கள் மாற்றம் காணத்தொடங்கின.

திராவிருவிருவியரின் தந்தை என்று அழைக்கப்படும் பிக்டல் கால்டுவெல் தென்னாட்டில் பேசப்படும் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலான ஒன்பது மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து மாறுபட்ட திராவிட மொழிக்குடும்பம் என்னும் தனிக்குடும்பத்தைச் சார்ந்தன என்று 1856ல் நிறுவிய போது தென்னிந்திய மொழிகள் பற்றிய பழைய கருது கோளை மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய நிரப்பந்தம் தோன்றியது.

இவ்விரு மொழிக்குடும்பங்களைத் தவிர திபத்தோ-சீன மொழிக் குடும்பம், ஆஸ்ட்ரிக் அல்லது முதைடா மொழிக்குடும்பம் ஆகிய இருவேறுபட்ட மொழிக்குடும்பங்களும் இந்திய மொழிக்குடும்பத்தில் இணைந்து கொண்டன. 1864ல் மாகக்ஸ்முல்லர் முண்டாவைத் தனி மொழிக் குடும்பமாக கண்டறிந்தார். இந்நிலையில் இந்திய நாட்டில் வேறுபட்ட நான்கு மொழிக்குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் பேசப்படுவதாகக் கருதப்பட்டு வந்தது. தற்போது அந்தமான் நிக்கோபர் தீவிலுள்ள மொழிகளும் ஒரு தனி மொழிக்குடும்பமாகக் கருதப்படுகின்றது. "நகலி" என்ற மொழி அதன் எச்சம் என்றும் கருதப்படுகின்றது. இந்நிலையில் வேறுபட்ட ஆறு மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் இந்நாட்டில் தற்போது வழக்கில் உள்ளனவாகக் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

(தொடரும்)

பேராசிரியர் எஸ்.கே. சிவபாலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மத்தின் குரல்

# இந்துமதக் கோட்பாடு

**மேன்மை-கொள் சைவ நீதி**
**விளங்குக உலகமெல்லாம்**

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப்பின்னைப் பெருமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாக" இலங்கும் இந்து மதம் இந்திய மக்களின் ஒப்பற்ற, மிக உயர்ந்த சிந்தனையின் வெளிப்பாடு. இந்தியாவின் வடமேற்கு எல்லையிற் பாயும் சிந்து நதியே (இந்து) இந்தியாவிற்கு அதன் பெயரை ஈந்தது. கிறிஸ்துவுக்கு முன் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே திருந்திய பண்பாட்டின் நிலைக்களமாக இந்தியப் பெருநாடு திகழ்ந்தது.

இந்தியாவின் மரபுகள் தொன்று தொட்டு இன்றுவரை இடையீடு இல்லாமற் பேணப்பட்டு வந்துள்ளமையால், அதன் தொன்மை மிக்க நாகரிகம், எகிப்து, மெசபத்தோமியா, கிரீசு ஆகியவற்றின் நாகரிகங்களினின்று வேறுபடுகின்றது. கிரீசில் வாழும் குடிமகன் ஒருவரிடம் அவர்களது மூதாதையர்களின் பண்பாட்டைப் பற்றி வினாவினால் அவனால் தெளிவான பதிலைக் கொடுக்க முடியாது. ஆனால் இங்கு அப்படியில்லை.

இந்தியாவிற்கு முதன் முதலாக வந்த ஐரோப்பியர் கண்டு வியந்தது பழமைத் தொடர்பறாத பண்பாடொன்று இருப்பதையே. ஏழை இந்தியனொருவன் தன் குடிச்சிறப்பையும், இந்திய மண்ணின் சிறப்பையும் நன்கு உணர்ந்துள்ளான். வைதிக அந்தணன் ஒருவன் நாள்தொறும், செய்யும் தனது வழிபாட்டிலே கேள்வி வழி வந்த மிகமிகத் தொன்மையான பாடல்களை ஓதுகின்றான். தனிமனித நலனுக்காக மட்டுமல்லாமல் உலக நலனுக்காகவும் பிரார்த்தனை செய்கின்றான். உண்மையில் இந்தியாவும், சீனாவுமே உலகின் தொன்மை மிக்க தொடர்பறாத பண்பாடுகளை இன்றளவும் போற்றிவருகின்றன.

இந்தப் பழமைப் பிடிப்பிற்கு வித்திட்டது வேதநெறி என்று துணிந்து கூறலாம். வேத காலம் மிகப் பழமையானது. இன்றளவும் காலவரையறையைத் திட்டமிட முடியவில்லை. இந்திய ஆராய்ச்சி வல்லுநர் ஒருவர் கி. மு. 6000 ஆண்டளவு பழமை வாய்ந்ததென்று கூறுகின்றார். பொதுவாக கி. மு. 1500 ற்கும் கி.மு. 1000 ற்கும் இடையில் இக்காலப் பகுதியைக் கொள்ளலாம்.

இந்து மதம் யாராலும் கொண்டுவரப்பட்டதல்ல. யாராலும் நிர்ணயம் செய்யப்பட்டதுமல்ல. மற்றைய மதங்களுக்கு அதனை நிறுவியவர்களின் பெயர் உண்டு. அவர்கள் அமைத்த சட்ட திட்டங்கள் உண்டு. எல்லைவரையறை, கால வரையறை உண்டு. ஆனால் இந்த மதத்திற்கு அப்படி எதுவுமேயில்லை. ஆதி-அந்தம் இல்லாதது, அநாதியானது. இதுவே இதன் பலம். இதன் மூலவேரைத் தேடித் தேடிச் சென்றால் வேதங்களும் அதன் ரிஷிகளுமே கிடைக்கிறார்கள். அவர்களாவது அதனைச் செய்தார்களா என்று பார்த்தால் அவர்கள் கூறுகிறார்கள், நாங்கள் மந்திர கர்த்தாக்கள் இல்லை, மந்திரத்ரஷ்டாக்கள் என்று. அது என்ன மந்திர-த்ரஷ்டா? அம்முனிவர்கள் பொறிபுலன் அடங்கிய மௌன நிலையில் இருக்கும்பொழுது மந்திரங்கள் அவர்கள் கண்முன்னே தோன்றும் - த்ரஷ்டா என்றால் கண்டவர்கள் - "சிருஷ்டி" காணுதல்......

ஆகாயத்தில் சப்த அலைகள் உருவாகின்றன. **(Space Vibration)**. இந்த ஒலி அலைகளினால் உருவானதே உலகம். அந்த ஒலி அலைகளை மந்திர வடிவில் கண்டு தொகுத்தனர் அந்த- சப்தம், ஜீவசப்தம். புருஷர்களாற் செய்யப்படாததால் வேதங்களை "அபௌருஷேயம்" என்றழைக்கின்றோம். பரமேஸ்வரனின் முகத்தினின்று, மூச்சுக்காற்றினின்று தோன்றியதே வேதங்கள் என்று கண்டனர் நம்முன்னோர்.

இனி வேதங்களின் சிறப்பை ஓரளவு நோக்குவோம். வேதங்கள் நான்கு. அவையாவன இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம், தர்மப்பிரமாணங்கள் பதினான்கில் வேதங்கள் நான்கும் முதலாவதாக உள்ளன. சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜோதிஷம், கல்பம் என்பவை ஷடாங்கங்களாகவும், மீமாம்ஸை, நியாயம், புராணம், தர்மசாஸ்திரம் உபாயங்களாகவும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குவேதம் :- இது சாலப் பழைமையுடையது. கி.மு. 1500 ற்கும் கி.மு 900 ற்கும் இடைப்பட்ட காலத்ததாகக் கொள்ளலாம். இருக்கு வேதம் வழிபாட்டு முறையில் இடம் பெற்ற வேள்விகளில் ஓதுக்குவதற்குப் பயன்பட்ட பாசுரங்களின் தொகுதியாகும். "ஸ்மிகிதா" என்ற சொல்லுக்கு ஒழுங்குபடச் சேர்த்துவைத்தது என்பது பொருளாகும். இருக்குவேதஸம்-ஹிதையில் 10170 இருக்ககள் உள்ளன. 1028 ஸாக்தங்கள். இவ்வேதத்தைப் பத்து மண்டலங்களாகவும், எட்டு அஷ்டகங்களாகவும் பிரித்துள்ளனர். அக்னியைப் பற்றிய பாசுரத்துடன் துவங்கி அக்னியைப் பற்றிய பாசுரத்துடனேயே நிறைவுறுகின்றது. இவ்வேதம் முழுவதும் செய்யுள் நடையிலேயே அமைந்துள்ளது. இதிலே காணப்படும் பிரார்த்தனை மந்திரம் மிக உயர்வானது. உலகம் முழுமைக்கும் பொதுவானது.

"எல்லா மக்களும் ஒன்று சேர்ந்த ஒரே மனதாக இணைந்து ஆலோசனை பண்ணட்டும். எல்லோரும் ஒரே குறிக்கோள் இலக்காகக்கொள்ளட்டும். எல்லோர் இதயங்களும் அன்போடு ஒன்று சேரட்டும். இப்படி ஒருமைப்பட்ட எண்ணத்தோடு எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கட்டும்:" "என்று" இருக்க வேதம் நிறைவடைகின்றது.

இருக்கு வேதத்தின் பெரும்பகுதி இன்னும் சரியாக உணரப்படவில்லை. இதற்கு மிகப்பழைய விளக்கவுரை யாசுகரின் (சொற்பிறப்பியல்). நிருத்தம் என்னும் நூல். ஆரியர்களால் சிறப்பாக வழிபடப் பெற்றவாக்ள தேவர்கள். "திவ்" என்னும் சொல்லின் அடியாகப்பிறந்த இந்தச் சொல்லுக்கு ஒளியுடையோர் என்பது பொருளாகும். ஆண்தெய்வங்களுடன், சில பெண் தெய்வங்களும் இருக்கு வேதத்திற் காணப்படுகின்றன.

பிருதிவி:- நிலத்தின் வடிவமாகக் கருதப்பட்ட இத்தெய்வ நிலமைகளைப்பற்றி அரிதாகவே பேசப்படுகின்றது.

அதிதி:- மென்மைப் பண்புகள் நிறையப்பெற்ற இத் தெய்வப்பெண் தேவர்களை ஈன்றெடுத்த பெருந்தாயாகக் குறிப்பிடப் பெறுகின்றாள்.

உழை:- விடியலின் தெய்வமாகிய இவளுக்குப் பல இன்சுவைப்பாசுரங்கள் பாடப்பட்டுள்ளன.

"தஸ்தாஸ்தே ரத்ன பாஜ ஈமஹே வயம்"

ஸயாம மாதுர் ந ஸ॰-நவ:

இரத்தின வியாபாரி நானாவர்ண மணிகளை அவிழ்த்துக் கொட்டுவதுபோல் வண்ண விசித்திரங்களைப் பொழியும் உஷையே அன்னைக்கு மகவுபோல் உனக்கு நாங்கள் இருப்போமாக!

ராத்திரி தேவி உறங்க வைத்த உலகை உஷை உயிர்ப்பிப்பதையும் பிராணிகளை ஓடவைப்பதையும், பறவைகளைப் பறக்க வைப்பதையும் ரிக்குகள் பாடின. கரையற்ற மங்களங்களை இன்று பொழிவாயாக. நாங்கள் மேலும் மேலும் மங்களகரமான செயல்களைச் செய்ய அருள் புரிவாய்.

"பத்ரம் பத்ரம் க்ரதும் அஸ்மாஸ॰ தேஹி" உஷையிடம் வேண்டுகின்றனர்.

(வளரும்)

**-கலாபூஷணம்**
**திருமதி. வசந்தா வைத்தியநாதன்**

**சைவ சமய குரவர் நால்வரும் மேற்கொண்டொழுகிய பக்தி நெறியினையும் இந்து சமயம் நால்வகையாகக் கூறுகிறது.**

**தாசமார்க்கம்:** அடிமையாய் இருந்து பக்தி செய்யும் நெறி.
திருநாவுக்கரசர் வரலாறு தாசமார்க்கக் கருத்துக்கு சிறந்த சான்று.

**சற்புத்திர மார்க்கம்:** மகனாக இருந்து பக்தி செய்யும் நெறி.
திருஞான சம்பந்தர் வரலாறு இந்நெறிக்குச் சான்றாகக் கூறப்படும்.

**சக மார்க்கம்:** தோழனாக இருந்த பக்தி செய்யும் நெறி.
சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு இதற்குச் சான்றாகும்.

**சன் மார்க்கம்:** ஞான நெறியில் நின்று பக்தி செய்தல்.
மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு இதற்குச் சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் அரங்கம்

செய்யுள் என்பது கவின்கலை வகுப்பில் முதற்கலை. கொலம்பியாப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் இர்வின் எட்வின் என்பவர் பொதுவகைச் செய்யுட்களைப் பற்றிக் கூறும் போது மொழிகளின் இயல்புகளை நன்கு ஆராய்ந்து இத்தாலிய மொழியில் உயிரெழுத்து ஒலிகள் அடிக்கடி வருதலால் இத்தாலி பேசுபவர் இயற்கையாகவே புலவன் ஆவான் எனக் கருதுகின்றார். இப்பண்பு இத்தாலிய மொழிக்கு இயல்பாகவே உண்டு.

இஸ்பானிய மொழியை நன்கு அறிந்தவர்கள் அதற்கும் இப்பண்பு உண்டு என்று கூறுவர். ஆனால், தமிழ் மொழிக்கும் இப்பண்பு இல்லாமலில்லை.

"பூவார் சோலை மயிலாடப்
புரிந்து குயில்கள் இசைபாட"

எனத் திரும்பத் திரும்ப சொல்லிப் பாருங்கள் இசைநயம் தெரியும்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்பது போலத் தமிழிலும் பாட முடியும். மேலும் சுவாமி விபுலானந்தரும் ஈசன் உவக்கும் இன்மலர்கள் மூன்று எனப் பாடும் பாடலும் எத்துணை இனிமை வாய்ந்தது.

"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளலடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

இத்துணைச் சிறப்புமிக்க தமிழிசையை வளர்த்த பண்டையத் தமிழ் மக்கள் இசைத்துறையில் அடைந்த முன்னேற்றத்தைப் பற்றி இதுகாறும் போதிய ஆராய்ச்சிகள் நடைபெறவில்லை. தொல்காப்பியமும், சிலப்பதிகாரமும், அதன் உரை நூல்களும் பெரிய இசைக்களஞ்சியம் போலப் பல உண்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. சம சுருதி இடைவெளி என்று கூறப்படும் [Equal Temperament] இசைமுறையை ஐரோப்பியர்கள் ஏறக்குறைய 200 ஆண்டுகட்கு முன்னரே கண்டுபிடித்தனர். ஆனால் தமிழர் இதனை ஈராயிரம் (2000) ஆண்டுகட்கு முன்னரே அறிந்திருந்தனர் என்பதற்குச் சிலப்பதிகாரமே சான்றாகும்.

ஓர்பீயஸ் எனும் கிரேக்கர் தம் யாழை வாசித்த பொழுது கொடிய விலங்குகளும் அவ்விசையில் ஈடுபட்டன என்றும், பாறைகள் நெகிழ்ந்தன என்றும் மேல்நாட்டில் பல கதைகள் வழங்கி வருகின்றன. இவ்வாறு பல கதைகளை நமது சங்க இலக்கியங்களிலிருந்தும் நாம் காட்டலாம். யானை இசைக்கு வணங்கும் என்பதை

"காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி விளங்கு"

என்ற கலித்தொகையும், "மதங்கொண்ட யானை ஊரை அழித்துத் திரிந்தக்கால் உதயணன் யாழ் வாசித்து அதனை அடக்கித் தனக்கு ஏவல் செய்யுமாறு செய்தான்" என்று பெருங்கதையும் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையின் மகிமை

முத்தமிழ் அரங்கம்

இசையின் மகிமையைப் பற்றிப் பலர் பலவாறெல்லாம் கூறியிருக்கிறார்கள். இனிய உணர்வைத் தரும் ஓசைத்தொகுதிகள் ஓர் ஒழுங்கு முறையிலே வெளிப்படுதலே இசையாகும். லலித கலைகளாகிய சங்கீதம், ஓவியம், சிற்பம் ஆகியவற்றுள் ஓவியம், சிற்பம் என்பன கண்ணாற் பார்த்து ரசிக்கக்கூடிய கலைகளாகும். ஆனால் சங்கீதமோ காதாற் கேட்டு இன்பம் பெறக்கூடிய கலையாகும்.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துளெல்லாம் தலை"

என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூற்றிலிருந்து செவியால் நாம் அடையக்கூடிய இன்பமே எமது மனதுக்கு அமைதியையும் தெய்வீக உணர்ச்சியையும் கொடுக்கக்கூடியதென்று புலனாகின்றது. இறைவன் இசை வடிவானவன் என்றும் இசையினால் இறைவனை அடையலா மென்றும் சான்றோர் கூறியுள்ளனர். "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்று அப்பரும் "ஏழிசையாய் இசைப்பயனாய்" என்று சம்பந்தரும் அருளியுள்ளனர். இவற்றினாலேயே சங்கீதமானது ஒரு தெய்வீகக்கலை என்று போற்றப்படுகிறது. சிவபெருமான் தனது கையில் மருகத்தையம் கிருஷ்ணபகவான் புல்லாங்குழலையும், ஆயகலைக்கெல்லாம் தெய்வமாகிய ஸரஸ்வதி கையில் வீணையையும் வைத்திருப்பதில் ஆழ்ந்த பொருளிருக்கின்றதெனவும் இதிலிருந்து சங்கீதத்தின். தெய்வத்தன்மை நன்கு புலனாகின்றதென்றும் கற்றோர் இயம்பியுள்ளனர். இலங்கை மன்னன் இராவணன் இசையில் மிகவும் அறிவும் ஆற்றலும் உடையவன். அதனாலேதான் தனது கொடியிலும் வீணையைப் பொறித்திருந்தான். ஸாமகானம் பாடிச் சிவபெருமானையே தன்வசப்படுத்திய பெருமையுடையன். இறைவனே இசையில் வசப்படும்போது ஏனைய சீவராசிகள் இசையில் மயங்குவதில் ஆச்சரியமில்லை. மேலும் குழந்தைகளும் மிருகங்களும் மற்றும் உயிரினங்களும் இசையில் மயங்குகின்றன. நாதஸ்வரக் கச்சேரிகளில் புன்னாகவராளி ராகம் வாசித்தபோது சிலசமயம் பாம்புகள் வந்ததென்று முன்னோர்கள் கூறுவதுண்டு. வண்டுகளின் ரீங்கார ஒலிகேட்டு மொட்டுகள் மலருகின்றன. "முல்லைவரி வண்டுதவாய் நெகிழுமே" என்கிறது சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய குறுந்தொகை.

இசையறிவில்லாத மக்கள்கூட இசையை நன்கு ரஸிப்பதை நாம் பார்க்கிறோம். பாஷை விளங்காத பாடல்களையும் இராக ஆலாபனைகளையும் நாம் கேட்டு நன்கு அனுபவித்து ரசிக்கிறோம். அவற்றின் கருத்து விளங்காவிடினும் அவற்றிலிருந்து வெளிவரும் ஓர் உணர்வினாலேயே நாம் அவற்றை ரஸித்து அனுபவிக்கக்கூடியதாக இருக்கின்றது. இதிலிருந்தும் இசையின் தெய்வீகத்தன்மையை நாம் அறியக்கூடியதாக உள்ளது.

தொடரும்........

**டபிள்யூ. எஸ். செந்தில்நாதன் – சட்டத்தரணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடனம்
## (நடனமும் அதன் தொன்மையும்)

முத்தமிழ் அரங்கம்
நாடகம்

### திருவிருத்தப் பதிகம்

குனிந்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம் மானிலத்தே.

திருநாவுக்கரசர் பாடியது

### நடனமும் அதன் தொன்மையும்

அண்ட சராசரங்களை ஆதிபராசக்தியானவள் படைத்துப் பின்னர் பூமியையும் படைக்கின்றாள். இவ்வாறு படைக்கும் போது ஆவேசமாக மனக்குமுறலுடனும் படைத்தபோது அது சூரியனாகவும் மிக அமைதியாகப் படைத்தபோது சந்திரனாகவும் கனிந்த மனதுடன் படைத்தபோது பூமியாகவும் அவளது படைப்புக்கள் உருப்பெற்றன. அண்டங்களைப் படைத்த ஆதிபராசக்தி, தான் படைத்த பூவுலகையே பெரிதும் விரும்பி அங்கு சஞ்சரிக்கின்றாள்

அப்போது தான் தனிந்து இயங்குவது குறித்து வருந்தியவளாய்த் தனக்குத் துணையாக மூன்று தேவர்களையும் படைக்கின்றாள். அந்த மூன்று தேவர்களிற் சிவந்த மேனி உடையவரும் மிக அழகிய தோற்றமும் ஜடாமுடியுடனும் காட்சி தந்த சிவபெருமானைத் தேர்ந்தெடுக்கின்றாள். சிவபெருமானும் பராசக்தியானவளை தனக்குத் தாயைப்போன்றவள் என்று நினைக்கின்றார்.

மீண்டும் அவள் பிறந்தால் அவளைப் பார்வதி என்ற பெயரில் மணப்பதாகவும் கூறுகின்றார். அது போன்றே தாக்ஷாயினி என்ற பெயருடன் பராசக்தியானவள் பிறந்து வளர்ந்து பரமசிவனை மணந்து கயிலையில் தேவர்களுக்கும் யாவர்க்கும் பார்வதி பரமேஸ்வரராய் அருள் பாலித்து வருகின்றார்கள்.

இத்தருணத்தில், தேவர் அனைவரும் ஒன்று கூடிக் கைலாசத்திற்கு வந்து தங்களின் மனம் எப்பொழுதும் ஏதோ சஞ்சலத்தில் இருப்பதாகவும் உடலும் உள்ளமும் மகிழ்ந்திருக்கச் செய்யும் வல்லமை உடைய ஏதேனும் ஒன்றை இறைவனாகிய சிவபெருமான் உருவாக்கித் தரவேண்டுமென்றும் வேண்டுகின்றார்கள். அப்போது சிவபெருமான் தனது கையிலிருந்த டமருகத்தை அசைத்து ஒலி எழுப்புகின்றார்.

உடுக்கையிலிருந்து எழுந்த அந்த ஓங்கார ஒலியானது அங்கிருந்த அத்தனை தேவர்களின் மனதிலும் ஒருவித உற்சாகத்தைக் கொடுத்ததுமல்லாமல் அவர்களின் மனதையும் காந்தம் போல் ஈர்த்தது. உடுக்கில் இருந்து எழுந்த அந்த ஓங்கார ஒலியே சிவனின் நர்த்தனமானது. உடலை அசைத்து அவர் ஆட, அவர் உடலில் இருந்த ஆடை, ஆபரணங்கள் ஆடின. தேவர்களும் முனிவர்களும் அவருக்குத் துணையாகப் பாடலைப் பாடினர்.

ஆடலுக்கு அரசனான அந்த நடராஜப் பெருமான் ஆட, ஜடைஆட, பிறை ஆட, குழையாட, அரவம் ஆட, நீண்ட அழகிய புருவம் அசைய அதனால் திருநீறும் அசைய, இனிமையான சலங்கையின் நாத ஒலி கைலை எங்கும் எதிரொலிக்க உமை அம்மை ஆட, பிரமன் தாளம் போட இப்படி அமைந்த நாட்டியந்தான் உலகிலேயே முதன்முதலில் ஆடப்பட்ட நாட்டியமாகும். சிவனின் ஆடலிலே அண்டங்கள் அசைந்தன; கோள்கள் தம் நிலையிலிருந்து திரிந்தன. கடல் பேரொலியுடன் ஆர்ப்பரிக்க அசையும், அசையாப் பொருட்கள், சகல ஜீவராசிகளும் தன்னிலை மறந்து ஆடத் தொடங்கியன.

இந்தத் திருநடனத்தால் உலகமே ஆடத் தொடங்கி விட்டது. எல்லாமே அதிர்ந்து கலங்கின. அதனால் தேவர்களும் பயந்தனர். அவர்கள் மீண்டும் ஆடலரசனிடம் சாந்தமும், நளினமும் நிறைந்த நாட்டியத்தைத் தங்களுக்கு ஆட வேண்டுமென்று வேண்ட இறைவனும்தனது டமருகத்திலிருந்து ஒலியை எழுப்பினார். அந்த ஒலியே நடராஜப் பெருமானின் ஆடல் ருத்திர ரௌத்திரத்தைக் குறிப்பதால் தாண்டவமாக மாறியது.

இறைவன் அந்த டமருகத்தை இரண்டாக முறித்து பருத்த (புறம்) பகுதியைச் சேர்த்து சிறுத்த (புறம்) பகுதியில் தோல் போர்த்து மகா விஷ்ணுவிடம் கொடுத்தார். இதுவே மத்தளம் அல்லது மிருதங்கம், கொட்டு, என்று பெயர் பெற்றது. மகாவிஷ்ணு மத்தளம் வாசிக்க, பிரமன் தாளம் போட ஆடிய ஆடல் காண்பதற்கு மிக அழகாகவும் ரம்யமாகவும் நளினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்தும் காணப்பட்டது. கொடி போல மகாதேவனின் இடை வளைந்து ஆடியதால் இதை "லதா தாண்டவம்" எனப்பட்டது. முதலில் ஆடியதுருத்திர தாண்டவம் என்றும் கூறப்பட்டது.

இந்த நளினத்தைப்பார்த்த பார்வதிக்கு ஆசை ஏற்பட்டு இறைவனை வேண்ட இறைவனும் பார்வதிக்குக் கற்றுத்தர அம்மையும் அந்த நடனத்தை ஒயிலாக ஆடலானாள். அதனால் அது "லாஸ்யம்" எனப்பட்டது. சிவசக்தி நடனத்தைக் கண்ணுற்ற தேவர்கள் இந் நாட்டியம் உலகமெங்கும் பரவவேண்டுமென்று ஆடலரசனை வேண்ட இறைவனும் அதற்கிசைந்து அருள்பாலித்தார்.

இறைவன் ஆடிய நடனம் தாண்டவமென்றும், இறைவி ஆடிய நடனம் "லாஸ்யம்" என்று இறைவனாற் கணிக்கப்பட்டது. பின்பு இறைவன் பரத ரிஷிக்கு ஆடலின் நுட்பங்களை விவரித்து உபதேசித்தார் என்றும் பரதரிஷி அதைத் தன் சீடர்களுக்கு உபதேசிக்கும் பொருட்டு "நாட்டியசாஸ்திரம்" என்ற நூலை எழுதினார். பரதரிஷியின் சீடரான தண்டு என்ற முனிவர் தாண்டவ நூலினை எழுதியருளினார் என்று கூறப்பட்டுள்ளது.

## நாட்டியம் பரவியமை

பார்வதி தனது தோழியான பாணாசுரனின் மகளான உஷை என்பவளுக்கு நாட்டியத்தைக் கற்றுத்தர, பின்பு உஷை தேவலோகப் பெண்களுக்கும், கந்தர்வப் பெண்களுக்கும் உத்தர தேசத்துப் பெண்களுக்கும் கற்றுக் கொடுத்தாள் என்று வேத சாஸ்திரம் கூறுகின்றது. பரதரிஷியிடம் பரதசாஸ்திரத்தைப் பயின்ற சீடர்கள் உலகமெங்கும் பிரித்து சென்று பரப்பினர்.

பரதரிஷி தன் சீடர்களுக்குப் போதிக்கும் போது பராசக்தி படைத்த உலகமும் அண்டங்களும் "சரீராபிநயமாகவும்", நான்கு வேதங்கள், பதினொரு புராணங்கள், ஆறு சாஸ்திரங்கள், வாசிகாபிநயமாகவும், சூரிய சந்திர நட்சத்திரங்கள், ஆஹார்யபிநயமாகவும், ஒப்பற்ற திருநடனம் புரிகின்ற மகேஸ்வரன் "ஸாத்விகாபிநயமாக"வும் உள்ளார் என்று குறிக்கப்பட்டள்ளது.

பரதரிஷிக்கு ஈஸ்வரன் நந்திகேஸ்வரரைக் கொண்டு தாண்டவத்தினையும் பார்வதியைக்கொண்டு லாஸ்யத்தையும் அருளினார். இதனால் பரதரிஷி கம்பீரமும், வேகமும், முரட்டுத் தனமும் நிறைந்த தாண்டவத்தை ஆண்களுக்கு மட்டுமே ஏற்றது என்று தொகுத்தார். மென்மையும், நளினமும் மிகுந்த லாஸ்யம் பெண்களுக்கு ஏற்றது என்று தொகுத்துள்ளார். ஆகவே, இன்றும் நாம் பரதரிஷியின் கோட்பாட்டுடன் கடைப்பிடித்து வந்தாலும் காலத்திற்கேற்பச் சில மாறுதல்களை ஏற்படுத்தித் தந்துள்ளார்கள் நம் முன்னோர்கள்.

## நாட்டியத்தின் பெருமை

நாட்டியமானது பிரம்மனால் ஐந்து வேத சாஸ்திரமாக வரையறுக்கப்பட்டுள்ளது என்று வேத சாஸ்திரம் கூறியுள்ளது. அதாவது "ரிக்" வேதத்திலிருந்து வாக்கியமும் "யஜுர்" வேதத்திலிருந்து அபிநயமும், "சாம" வேதத்திலிருந்து கானமும் (இசை) "அதர்வண" வேதத்திலிருந்து ரஸ பாவங்களும் ஆகிய நான்கையும் ஒன்று சேர்த்து உலகத்தின் மேன்மையான கலையாக நாட்டியக் கலையின் இலக்கணத்தை வகுத்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

நாட்டியத்தைப் பார்ப்பதால் மனிதன் தனது மனதில் உள்ள துக்கத்தினை மறந்து ஆனந்தம் அடைகின்றான். மேலும் நாட்டியத்தைப் பயிலுவதால், நல்லபுகழ், அழகு, பண்பாடு, ஒழுக்கம், பரந்தமனம் என்பன உண்டாகின்றன. அது மட்டுமல்ல எல்லாவற்றிலும் அறிவும், அனுபவமும் ஏற்படுகின்றது. சமூகத்திலும், கலை வாழ்விலும் ஒரு கௌரவமான அந்தஸ்தை ஏற்படுத்தித் தருகின்றது.

கலை பிறநாட்டுடனும் ஒரு நல்லெண்ணத் தூதாக அமைகின்றது. எங்களது நாட்டியக் கலையைப் பயிலுகின்றவர்களும், காண்பவர்களும் பரந்தாமன் உறையும் சொர்க்கலோகத்தினைப் பூலோகத்திலேயே அடைவது போன்று ஒரு உணர்வை அடைவர். ஒரு குழந்தையைக் கையில் எடுத்துக் கொஞ்சும் போது அடைகின்ற இன்பப், பேரானந்தத்தை விட நாட்டியத்தை ஆடும் போதும், பார்க்கும் போதும் இவ்வகை உணர்ச்சி ஏற்பட்டு அதிக ஆனந்தத்தைக் கொடுக்கும்.

உலகத்திலே அடைகின்ற ஆனந்தங்களிலேயே மிகப் பெரியதும், ஈடு இணையற்றதும், மீண்டும் மீண்டும் நினைத்து ஆனந்தப்படக்கூடியதும் நாட்டியமே. பிரம்மன் தான் எழுதிய நாட்டிய வேதத்தில் இப் பூவுலகத்தில் பிறப்பு, இறப்பு, பாசத்திலிருந்தும் விடுபடுவதற்கும் இறைவனை மிக எளிதாகக் காண்பதற்கும், ஐம்புலன்களை அடக்கி ஆளுகின்ற முனிவரைக் காட்டிலும் மிக அதிகமான மனபலம் பெறக்கூடியதுமான கலை, நாட்டியக் கலை ஒன்றே. அறுபத்தி நான்கு கலைகளிலும் சிறந்தது நாட்டியக் கலையே.

நாட்டியாசிரியை: –

**திருமதி – பிரகதா தில்லைநடராஜன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் பற்றிய ஒரு கண்ணோட்டம்

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

## திருக்குறள்

ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப்பொருளாய் மிக விளங்கித் – தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதோ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு
–மாங்குடி மருதனார்–

பண்பாட்டுக்குரிய இலக்குகளை இலட்சியமாகக் கொண்டு கோவை செய்து ஆக்கப்படுத்துவதுதான் இலக்கியம் எனப்படுகின்றது. இந்தவகையில், பலவகையான பொக்கிஷங்களையும் தன்னுள்ளே அடக்கியதொரு அறிவுக்களஞ்சியந்தான் வள்ளுவனின் முப்பாலாகும். இவ்வாறான திருக்குறள் பற்றியும் அது தோற்றம் பெற்ற காலம்பற்றியும், காலச் சூழ்நிலை பற்றியும் பல்வேறு வகையான ஐயப்பாடுகள் நிலவிவருவதைக் காணலாம். வள்ளுவர் சங்க காலத்துக்குரியவர் என்றும் சங்க காலத்தில் தோன்றிய நூல் தான் திருக்குறள் என்றும் பலர் கருத்துக்களை வெளிப்படுத்திய போதும் இந்நூலின் பொருள் பற்றியும், அதன்சிறப்புக்கள் பற்றியும் ஆழ்ந்து நோக்கும் போது இது அறநூல் காலமென அழைக்கப்படுகின்ற சங்கமருவிய காலத்துக்குரியது என்பது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. "கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத்தறித்தகுறள்" என அறிஞர்களாற் சிறப்பித்துக் கூறப்படும் இக் குறட்பாக்கள் மனிதசமுதாயம் வாழவும் வளரவும் வழிகாட்டும் ஒரு பொதுமறையாகும். வேதம், உபநிடதம், கீதை, இராமாயணம், பாரதம் என்பன உலகறிந்த இந்தியப் பெருநூல்கள். இவ்வரிசையிலேயே திருக்குறளை வைத்துப் போற்ற வேண்டும். 1330 குறட்பாக்களையும் தன்னகத்தே கொண்டு இலங்கும் திருக்குறளை ஆய்வுக்குட்படுத்தும் போது பல்வேறுபட்ட உண்மைகளையும் யதார்த்தப் பண்புகளையும் நாம் கண்டு தெளியலாம்.

இன்று பல்வேறு மொழிகளிலே மொழிபெயர்க்கப் பட்டுள்ள திருக்குறளானது வள்ளுவரின் சமயம் பற்றியும் அவரது பிறப்புப்பற்றியும் பல்வேறுபட்ட குழப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளது. திருக்குறளைத் தங்கள் தங்கள் சமய நூலாக கொள்பவர்களும் பலர் உள்ளனர். "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்ற அடிகள் மூலமாக வள்ளுவர் கூறிய பகவன் என்பது இந்து மதக் கடவுளைக் குறிப்பதாக இந்துக்கள் கருதுவர். இவ்வடிகளிற் குறிப்பிடப்படும்ஆதி, பகவன் போன்ற சொற்கள் வள்ளுவரின் தாயையும்தந்தையையும் குறிப்பிடுவதாகத் தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள் கருதுவர்.

இந்நூலானது எழுந்த சூழலை நோக்கும் போது சங்கமருவிய காலத்தில் களப்பினர் என்கின்ற கூட்டத்தினர் தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருந்த காலத்தில் ஒழுக்க நெறிகள் எல்லாம் கெட்டு, சமுதாயத்தில் மனிதர்கள் வாழ வழியறியாது தவித்துக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் தான் மக்களுக்கு நல்லவழிகாட்ட வேண்டிய தேவை அக்காலப் புலவர்களுக்கு ஏற்பட்டது. இதனால் அறத்தை வலியுறுத்திப் பாடினர். இந்த நோக்கத்தில் தான் வள்ளுவரும் திருக்குறளை அருளிச் செய்யவேண்டிய இலக்கியச் சூழல் ஏற்பட்டது எனலாம்.

பண்டைய இலக்கியங்களில் தனி மனிதனுக்கு ஏற்படும் இன்பதுன்பங்களுக்குரிய காரணங்கள் பற்றி எடுத்து ஆராயப்படவில்லை என்றே கூறலாம். ஆனால் தனி மனிதன் ஒருவனுக்கு இயற்கையில் ஏற்படும் உணர்ச்சியினை வென்று இயற்கையோடு அவன் போராட நினைத்தால் வள்ளுவனின் துறவியல் அவனுக்கு வழிகாட்டும். இயற்கை உணர்ச்சியால் உந்தப்பட்டுக் காதல் நெறியில் மூழ்கிக் கற்பு நெறியில் தோய்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ விரும்பினால் வள்ளுவனின் காமத்துப்பாலும் இல்லறவியலும் வழிகாட்டும். குடும்பம் சமுதாயமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரும் போது தனி மனிதனின் மகிழ்ச்சி குடும்ப மகிழ்ச்சியாகவும் குடும்ப மகிழ்ச்சி சமுதாய மகிழ்ச்சியாகவும் சமுதாய மகிழ்ச்சி உலக மகிழ்ச்சியாகவும மாறுவதற்கு வள்ளுவனின் பொருட்பால் வழிகாட்டும். இவ்வாறு சமுதாய மறுமலர்ச்சிக்குப் புத்துணர்ச்சியை ஊட்டிய பெருமை திருக்குறளுக்குண்டு.

மக்கள் அனைவரையும் சாதிசமய வேறுபாடு இல்லாமல் ஒன்றாகச் சேர்க்க வல்லதாக, தமிழர் மறையாக விளங்கும் இத் திருக்குறள் தமிழருடைய சிந்தனையின் கொடு முடியாகவும் தமிழ்ப் பாண்பாட்டின் ஒளி விளக்காகவும் விளங்குகின்றது. சுருங்கிய சொல்லால் விரிந்த பொருளை விளக்குகின்றது என்றும் உலக மக்களின் உள்ளத்தில் இருக்கும் இருளையகற்றும் ஒளி விளக்கென்றும் புகழ்ந்துரைக்கப்படுகின்றது. இக்குறட்பாக்கருத்துக்களைத் தமிழில் தலைசிறந்த இலக்கியங்கள் கூடத் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது. வள்ளுவன் கையாண்ட உவமைகள் கூடக் காலத்தையும் வென்று நிற்கும்தன்மை வாய்ந்தவை. பின்வரும் சில உவமைகள் இதற்குச் சான்று பகரும்:

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"
"தலையின் இழிந்தமயிர் அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை"
"நச்சப்படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சுமரம் பழுத்தது"
" செல்லான் கிழவனிருப்பி நிலம்புலந்
தில்லாளி னூடிவிடும்

வள்ளுவரின் குறளுக்கு உரையெழுதியுள்ளவர்கள் பலர். இவர்களுட் காலத்தால் முந்தியவர் மணக்குடவர் என்பராவர். எனினும் பரிமேலழகர் வகுத்த உரையே சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இவரின் உரையில் எளிதில் விளங்க முடியாத மிக நுண்ணிய கருத்துக்களைக் கற்பவர் யாவரும் மிக எளிதில் விளங்கிக் கொள்ளும் வண்ணம் தெளிவாக அமைந்துள்ளதே இவரின் உரைச் சிறப்பிற்கான காரணமாகும்.

எல்லாவற்றையும் தமது திருக்குறள் என்னும் நூலிலே கூறிய வள்ளுவர் வீடுபேறு பற்றிக் குறிப்பிடவில்லை. அறம் பொருள் இன்பம் என்பவற்றைக் கடைப்பிடித்து இல்வாழ்வான் ஒழுங்காக ஒழுகுவானாய் இருந்தால் அவன் வீடு பேற்றினைத் தாமாகவே பெற்று விடுகின்றான். அதுமட்டுமல்ல இன்று பழந்தமிழ் இலக்கியங்களில் இடைச்செருகல் இடம் பெற்றுவருவது சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது. எத்தனையோ இலக்கியங்களில் இடைச் செருகல்இடம் பெற்றாலும் திருவள்ளுவரின் திருக்குறளில் இத்தகைய இடைச் செருகலுக்கு இடமேயில்லை. ஏனெனில் வள்ளுவனின் அதிகாரவைப்பு முறையும் வரையறுக்கப்பட்ட குறட்பாக்களுமே காரணம்.

அமைப்பு முறை

பதினெண்கீழ் கணக்கு நூல்களில் முதன்மை வாய்ந்த இந்நூலின் அமைப்பு முறைபற்றி நோக்கினால்இது 133 அதிகாரங்களைக்கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திற்கும் பத்துக் குறட் பாக்கள் வீதம் 1330 குறட் பாக்களையுடையது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பெரும் பிரிவுகளையும் கொண்டுள்ளது. அறத்துப்பால் 38 அதிகாரங்களையும் நான்கு இயல்களையும் உடையது. அவையாவன பாயிரம் (4 அதிகாரங்கள்), இல்லறவியல் (20 அதிகாரங்கள்), துறவறவியல் (13 அதிகாரங்கள்), ஊழ் (13 அதிகாரங்கள்) என்பவையாகும். பொருட்பால் 70 அதிகாரங்களையும் மூன்று இயல்களையும் உடையது. அவையாவன அரசியல் 25 அதிகாரங்கள்), அங்கவியல் (32 அதிகாரங்கள்), ஒழிபியல் (13 அதிகாரங்கள்) என்பனவையாகும். காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் இரண்டு இயல்களையும் உடையது. அவையாவன களவியல் (7 அதிகாரங்கள்), கற்பியல் (18 அதிகாரங்கள்) என்பவையாகும்.

இவ்வாறு காலத்தையும் வென்று நிற்கும் திருக்குறளில் அமைந்துள்ள ஒவ்வொரு அதிகாரம் பற்றியும் அதன் சிறப்புக்கள் பற்றியும் இனிவரும் மலர்களில் நோக்குவோம்.

"இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர் வள்ளுவர் என்று யார் கூறியது? அவர் இன்னமும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார். வாழ்வுக்கு இலக்கணம் வகுத்தவர். அவர் வழங்கிய குறட்பாக்கள் உள்ளவரையில் வாழ்ந்து கொண்டுதான் இருப்பார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கியோன்.
## கம்பவாரிதி இ. ஜெயராஜ்

## கம்பராமாயணம்

உ

சிவமயம்

கம்பன் தமிழர்க்குக் கிடைத்த ஓர் அட்சய பாத்திரம்
அள்ளி அள்ளி நம்முன்னோர்கள் தேவைக்கதிகமாக எடுத்த பின்னும்,
இன்றும் நமக்குப் புதிதாகப் பல தந்து நிற்கிறான் அவன்.
அவன் நம் இனம் செய்த தவம்.
விடுவிக்க விடுவிக்க எல்லையின்றி விரிந்து வியப்புத் தருவது கம்ப சூத்திரம்.
கம்பக் கடலில் எத்தனை எடுத்தாலும் முத்துக்கள் முடிவதில்லை.
'கல்வியிற் பெரியவன் கம்பன்'
ஆம்,
வள்ளுவன் போன்ற தெய்வப் புலவரைப் பார்த்த பின்பும்,
கம்பன் பற்றிய நம் முன்னோரின் கணிப்பிது.
கம்பனைக் கற்கக் கற்க இவ்வார்த்தையின் உண்மை வானளவு விரிவதைக் காணலாம்.
நாம் எத்தனை ஆழமாகப் போனாலும், அதனிலும் ஆழங் காட்டி,
நமக்கு அறிவின் எல்லையாய்க் காட்சி தருகிறான் கம்பக்கவி.
காலத்தால் முந்திய, பிந்திய புலவர்களின் கருத்துக்களை,
தன் காவியத்துள் அடக்கி,
காலங் கடந்து நிற்கிறான் கம்பக் கடவுள்.
அவனை,
மதவாதியாக,
வர்க்க சார்பாளனாக,
பிற்போக்காளனாக,
இன்னும் பலவாக இனங் கண்டு குறை சொல்பவர்களும் இவ்வுலகில் இல்லாமல் இல்லை.
வாலற் கடலின் ஆழமளந்த நரியின் செயலாய்,
தம் அறியாமையை அறிவாய்க் கொண்டு,
கம்பனை இழிவுபடுத்தி விட்டதாய்க் குதூகலிக்கும்,
இப்பேதமையாளர் செயல் கண்டு நகைத்து நிற்பர் அறிவோர்.
கடவுளையே மறுக்க ஆளிருக்கும் இவ்வுலகில் கம்பனை மறுக்கவா ஆளிரார்?
நம் இனத்தின் சொத்தைப் பேணாத அவர் தம் பேதமை கண்டு வருந்துதலின்றி வேறென்ன - செய்யலாம்?
இருளோடு மோதுவதை விட வெளிச்சத்தை வெளிக் கொணர்வது நன்றல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்முயற்சியே இக்கட்டுரைத் தொடர்.
மாதா மாதம் கம்பனின் கைத்திறன் கண்டு மகிழ,
உங்களோடு இக்கட்டுரைத் தொடர்மூலம் இணைகின்றேன்.
கம்பப் படகேறித் தமிழ்க் கடலின் கரை காண முயல்வோம்.

கம்பராமாயணத்தை வெறும் கதையெனப் பலரும் நினைக்கிறார்கள்.
அங்ஙனமாயின்,
அதனைச் சமய நூல் வரிசையில் இதிகாசங்களில் ஒன்றாய் நம் ஆன்றோர் இணைத்திருப்பாரா?
இராம கதையினூடு கம்பன் சொல்பவை பல. கம்பன்,
ஆயிரமாய் விரிந்த பிரிவுற்ற மனித விம்பங்களைத் தம் பாத்திரங்களினுட் படம் பிடிப்பான்.
தமிழின் தனிச்சுவையைத் தன் ஒவ்வோர் எழுத்துள்ளும் பொதித்திருப்பான்.
தமிழ் அன்னையின் அழகுச் சாயல் அத்தனையையும் ஒன்று விடாமல்.
தன் காவியத்தின் வெவ்வேறு இடங்களிற் காட்டி வியக்க வைப்பான்.
நவீன நாடகத்திறன் அத்தனையையும் தன் கதைப் போக்கிற் பொருத்தி மகிழ வைப்பான்.
ஞானிகள் கண்ட தத்துவங்கள் அத்தனையையும் தன் கவிக்குள் அடக்கி அற்புதம் செய்வான்.
இங்ஙனமாய் நமக்கு இராம கதையூடு கம்பன் தரும் சொத்துக்கள் பல.
அறவியல், அறிவியல், பொருளியல்,
இன்பவியல், உலகியல், சமுகவியல், தத்துவவியல் என,
பல துறையும் கம்பனைக் கற்பார்க்குக் கைவரும் என்பது திண்ணம்.
முத்தமிழும் கம்பன் காவியத்துள் அடக்கம்.
கம்பனை முழுமையாய்க் காண்தென்பது,
கடவுளை முழுமையாய்க் காணும் முயற்சி போல்,
என்றும் முற்றாது என்பதில் ஐயமில்லை எனினும்,
கம்பன் தன் அவையடக்கத்திற் சொன்னாற் போல்,
கம்பன் சுவை எனும் பாற்கடலை,
முழுதும் நக்கிக் குடிக்கும் விருப்புற்ற பூனையாய்,
இக்கட்டுரைத் தொடரை,
ஆசை பற்றி அறையல் உற்றேன்.
கற்றோர் என அறியாமை உணர்ந்து இம்முயற்சியை நகையாது இருப்பாராக.
மற்றோர் நான் காட்டுவன கொண்டு காணாதவை காண முயல்வாராக.

இக்கட்டுரைத் தொடரில்.
கம்பனின் கவிதைதிறன்,
கம்பனின் கற்பனைத் திறன்,
கம்பனின் தத்துவ விளக்கம்,
கம்பனின் சமய சமரசம்,
கம்பனின் சமுதாய நோக்கு என,
பலவற்றையும் காண முயல்வோம்,
இக்கட்டுரைத் தொடரோடு,
கம்பனின் பல பரிமாணங்களையும் காட்டுவதே என் நோக்கம்.
இளைஞர்கள் பயன் கொள்ள முயல்வராக.
வரும் மலரிற் கம்பனின் முதற் கைவண்ணம் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்பாவுக்கு பகவான் கூறிய கதை!

# நம்பினோரர் கெடுவதில்லை!

## சிறுவர் பகுதி

ஆலய வீதி ஒன்றிலே பண்டிதர் ஒருவர் பாலகிருஷ்ணன் பெருமை பற்றிக் கதாப்பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். நூற்றுக்கணக்கான பக்தர்கள் திரண்டிருந்து கதாப்பிரசங்கத்தைக் கேட்டு ரசித்துக்கொண்டிருந்தனர். அப்போது.....!

அரண்மனையில் திருடிய திருடன் ஒருவனைக் காவலாளிகள் இருவர் துரத்திக் கொண்டு வந்தனர். வேகமாக ஓடிவந்த திருடன்,கதாப்பிரசங்கம் கேட்டுகொண்டிருந்த பக்தர்கள் மத்தியிலே புகுந்து கூட்டத்தோடு கூட்டமாக அமர்ந்து கொண்டான்.

காவலாளிகள் எவ்வளவு முயற்சி செய்தும் அந்தத் திருடனைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. ஏமாற்றத்துடன் அரண்மனைக்குத் திரும்பிச் சென்றனர். திருடன் தன்னை மறந்த நிலையில் பாலகிருஷ்ணன் பற்றிய கதாப்பிரசங்கத்தை ரசித்துக் கொண்டிருந்தான். கதாப்பிரசங்கம் செய்து கொண்டிருந்த பண்டிதர் ஒரு கட்டத்தில் பின்வருமாறு கூறினார்:-

"அன்பர்களே! பாலகிருஷ்ணன் - குழந்தைக் கண்ணன் தலையில் தங்கக் கீரீடம் ஒளி வீச, கழுத்திலே தங்கமாலைகளும் முத்து மாலைகளும் அசைந்தாட, இடையிலே தங்க ஒட்டியாணம் இலங்க, கால்களிலே தங்கச் சலங்கைகள் கலீர...! கலீர...!' என ஒலிக்க, மாலை வேளையிலே ஜமுனை நதிக்கரையிலே மாடுகளை மேய்த்துக்கொண்டு, புல்லாங்குழலில் தெய்வகானம் இசைத்தபடி வருவான். அந்த அற்புதக் காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்...!

பண்டிதரின் இந்த வர்ணனையைக் கேட்டதும் அப்படியே நம்பி விட்டான் அந்தத் திருடன். பாலகிருஷ்ணனின் தங்க நகைகளைப் பற்றிச் சிந்தனை செய்தபடி அமர்ந்திருந்தான்.

பண்டிதர் கதாப்பிரசங்கத்தை முடித்ததும் கூட்டத்தினர் கலைந்து சென்றனர். கண்ணனின் நகை பற்றிய சிந்தனையில் மூழ்கியிருந்த திருடன் மட்டும் அசையாது அங்கேயே வீற்றிருந்தான்.

அப்பனே! கதாப்பிரசங்கம் முடிந்து விட்டது. பக்தர்களெல்லாம் போய் விட்டார்கள்....நீ மட்டும் ஏன் இங்கேயே அமர்ந்திருக்கிறாய்.....?" என்று கேட்டார் பண்டிதர்.

கற்பனை கலைந்து எழுந்து நின்ற திருடன் பணிவாகப் பண்டிதரை வணங்கினான். "ஐயா! இன்று மாலை ஜமுனை ஆற்றங்கரைக்குப் போனால் தங்க நகைகள் அணிந்து வரும் அந்த பாலகிருஷ்ணனைப் பார்க்கலாமா...?" என்று கேட்டான்.

இப்படி அவன் கேட்டதும் அவனை ஆச்சரியத்தோடு பார்த்த பண்டிதர், "ஆமா, இப்போது நீ அங்கு போனால் அந்தப் பாலகிருஷ்ணனைக் காணலாம்..." எனக் கிண்டலாகக் கூறினார். ஆனால் திருடன் முழு மனதுடன் அவருடைய பேச்சை நம்பினான். ஆற்றங்கரைக்குப் போனால் பாலகிருஷ்ணனைக் காணலாம் என்ற திட நம்பிக்கையுடன் ஜமுனை ஆற்றங்கரையை நோக்கிச் சென்றான். அவன் ஆற்றங்கரையை அடைந்ததும்.....!

மாடுகளை ஓட்டிக்கொண்டு பாலகிருஷ்ணன் தன்னந்தனியனாக வருவதைக் கண்டான். குட்டிக் கண்ணன் அருகில் வந்ததும் அவன் அணிந்திருக்கும் ஆபரணங்களைப் பறித்துக்கொண்டு ஓடிவிடவேண்டும் என்று மனதில் எண்ணியபடி நின்றான் அந்தத் திருடன்.

கண்ணன் அருகில் வந்ததும் பார்த்தான் திருடன், பாகவதர் வர்ணித்த அத்தனை தங்க நகைகளுடனும் பாலகிருஷ்ணன் காட்சியளித்தான். "பாலகிருஷ்ணனைப் பணிந்து வணங்குவது போல நடித்து, முழு நகைகளையும் பறித்துக்கொண்டு ஓடிவிட வேண்டும்" என முணுமுணுத்தபடி பாலகிருஷ்ணனைப் பணிந்து வணங்கினான் திருடன், வணங்கி விட்டு எழுந்த திருடன் அதிர்ந்து போய் நின்றான். காரணம்....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அணிந்திருந்த அத்தனை ஆபரணங்களையும் கழற்றித் திருடனுக்குக் கொடுப்பதற்குத் தயாராக நின்றான் பாலகிருஷ்ணன்.

"அன்பனே! இங்கு வந்தால் என்னைக் காணலாம், எனது நகைகளை அபகரிக்கலாம் என்று முழு நம்பிக்கையோடு வந்தாயல்லவா? நம்பினோர் கெடுவதில்லை, இதோ நீ விரும்பிய எனது ஆபரணங்கள்" என்று கூறி நகைகளைத் திருடனிடம் கொடுத்துவிட்டு மாயமாக மறைந்து விட்டான் பாலகிருஷ்ணன்.

திருடன் பண்டிதரின் வீட்டுக்குச் சென்று நடந்தவற்றை விளக்கிவிட்டு கண்ணனின் ஆபரணங்களைக்காட்டினான். பண்டிதர் பேராச்சரியம் அடைந்தார்.

"அன்பனே! ஜமுனா நதிக்கரையிலே கண்ணன் வருவான் என்று மனதார நம்பினாய் கண்ணனைக் கண்டு அவன் அருள் பெற்றாய், நம்பினோர் கெடுவதில்லை என்பது நான்கு மறைத்தீர்ப்பாகும்....." என்று கூறி அவனுடைய நம்பிக்கையை வெகுவாகப் பாராட்டினார் அந்தப் பண்டிதர்.

**உள்ளம் உயர்வடைந்தால்.....!**

மனிதன் வல்லவனாக இருந்தால் மட்டும் போதாது, அவன் நல்லவனாகவும் இருக்க வேண்டும். உடலால் உயர்வது மனிதனுக்குப் பெருமை இல்லை, உள்ளத்தால் உயர்வதே பெருமையாகும்.

ஒருவன் நல்ல உள்ளம் படைத்தவனாக இருந்தால் அவன் காணும் காட்சிகளும் நல்லவையாகவே இருக்கும். ஒருவன் கெட்டவனாக இருந்தால் அவன் காணும் காட்சிகளும் கெட்டவையாகவே தோன்றும்.

ஒருநாள் பகவான் கிருஷ்ணர், கொடிய குணம் படைத்த துரியோதனனைப் பார்த்து "துரியோதனா! நீ வீதிக்குச் சென்று நல்ல மனிதர்கள் நால்வரை அழைத்து வா... என்று கூறினார்.

துரியோதனன் உடனே புறப்பட்டுச் சென்றான். நீண்ட நேரம் வீதியிலே சுற்றித் திரிந்து விட்டு, தனிமையில் திரும்பி வந்தான்.

"துரியோதனா! நல்ல மனிதர்கள் நால்வரை அழைத்துக் கொண்டு வரச் சொன்னேனே .... தனிமையில் வருகிறாயே?" என்று கிருஷ்ணர் கேட்டார்.

"கிருஷ்ணா! நான் எங்கெல்லாமோ சுற்றி அலைந்தேன். ஒரு நல்ல மனிதனைக்கூடச் சந்திக்க முடியவில்லை. நான் சந்தித்த அனைவரும் கெட்ட மனிதர்கள்தான்" என்று துரியோதனன் கூறினான்.

கிருஷ்ணர் தருமனைப் பார்த்து, "தர்மா! நீ வீதிக்குச் சென்று, கெட்ட மனிதர்கள் நால்வரை அழைத்துக்கொண்டு வா..." என்று கூறினார்.

தருமன் வெளியே சென்றான். நீண்ட நேரத்துக்குப் பின்பு தனியே திரும்பி வந்தான்.

"தருமா! நான்கு கெட்ட மனிதர்களை அழைத்து வரச்சொன்னேன், தனிமையில் வந்திருக்கிறாயே ... ஏன்?" என்று கேட்டார் பகவான் கிருஷ்ணர்.

"கிருஷ்ணா! நான் பல இடங்களில் தேடினேன். ஒரு கெட்ட மனிதனைக்கூடக் காணவில்லை. நான் கண்டவர்கள் அனைவரும் நல்லவர்களே" என்றான்தருமன்.

இச்சம்பவத்தின் மூலம் ஒரு உண்மை புலப்படுகிறது அல்லவா?

ஒருவன் நல்ல உள்ளம் படைத்தவனாக இருந்தால் அவன் பார்வையில் எல்லாம் நல்லவையாகவே தென்படும். கெட்ட உள்ளம் படைத்தவனுக்கு எல்லாம் கெட்டவையாகவே தெரியும்.

–மாஸ்டர் சிவலிங்கம்.

# பொன்மொழிகள்

மனம், உடல், செயல் ஆகிய மூன்று நிலைகளிலும் தூய்மையைக் கடைப்பிடிக்கும்மாணவனே பிறருக்குத் தொண்டு செய்யும் தகுதி பெறுகிறான்.

மேற்படி மூன்று தூய குணங்களும் ஒரு மாணவனின் வாழ்க்கையில் அமையுமானால் அவன் வாழ்க்கை வெற்றி பெறுவது நிச்சயம்.

–மகாத்மா சாந்தி

நீ என்ன நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். நீ உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை உடையவனாகவே ஆகி விடுவாய். என்னால் முடியாது–இயலாது என்று ஒரு நாளும் சொல்லாதே. என்னால் முடியும் என்று உறுதியுடன் கூறு. மனவலிமை தான்வாழ்வு.

– சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கைவிளக்கு ஏந்திச் செல்ல வேண்டும்!

சுபாஷினி

1. மகாபாரதத்தில், பஞ்சப்பாண்டவர்களை எப்படி வெல்லலாம் என்று துரியோதனனும், சகுனியும் யோசித்துக் கொண்டிருந்தார்கள். சூதாட்டத்தின் மூலமாக தர்மரின் பொருளையும், பதவியையும் பறிப்பது மிகவும் சுலபம் என்ற முடிவுக்கு வந்தனர்.



2. துரியோதனன் அழகான மண்டபம் ஒன்று கட்டி முடித்தான். பின்பு, "அழகான மண்டபம் ஒன்று கட்டியுள்ளேன். மனம் கலந்து சூதாடி மகிழ்ந்திருப்போம்! வாருங்கள்!" என்று அழைப்பு விடுத்தான்.



3. இந்த அழைப்போலையில் திருதராஷ்டிரர் கையெழுத்திட்டிருந்தார். அழைப்போலையை விதுரரிடம் கொடுத்து தர்மரிடம் சேர்த்துடுமாறு துரியோதனன் ஏற்பாடு செய்கின்றான்.



4. அழைப்பை பெற்றுக்கொண்ட தர்மர், தமது ஒவ்வொரு தம்பியிடமும் தனித்தனியாக செல்கிறார். அவர்கள் ஒவ்வொருவரிடமும், "திருதராஷ்டிரர் கையெழுத்திட்ட ஓலையை துரியோதனன் விதுரர் மூலமாக அனுப்பியுள்ளோன்! மண்டபத்தை பார்க்கப் போகலாமா? என்று கேட்க, யாரும் ஒன்றும் சொல்லவில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கடைசியாக சகாதேவனிடம் செல்கிறார். தர்மர் சொன்ன விஷயத்தைக் கேட்ட சகாதேவன் திரும்பத் திரும்பக் கேட்கிறார்.

"இந்த ஓலையில் கையெழுத்திட்டது யார்?"

"அனுப்பியது யார்?"

"கொண்டு வந்தது யார்?" என்று கேட்கிறார்.



6. தர்மரும் மிகவும் பொறுமையாக, "திருதராஷ்டிரர் கையெழுத்திட்டார். துரியோதனன் அனுப்பியுள்ளான். விதுரர் எடுத்து வந்துள்ளார்" என்று கூறுகிறார். கடைசியாக, "எதற்கு திரும்பத் திரும்ப அதையே கேட்கிறாய்? என்றும் கேட்கிறார்.



7. "அண்ணா! கையெழுத்து போட்டது ஒருவர். அனுப்பியவர் ஒருவர். கொண்டு வந்தது மற்றொருவர் என்று மூன்று பேர் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது உங்கள் மனதில் தான் தோன்றுகிறது. ஆனால் இவை யாவையும் ஒருவன்தான் செய்கிறான். அவன், அதோ அரண்மனை வாசலிலேயே நிற்கிறான்!" என்று சகாதேவன் கூறுகிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவம்

## சித்த, ஆயுள்வேதம்

### காலமும் சித்த மருத்துவமும்

நாம் மறைந்த காலத்தினுள்ளே, உட்புகுந்து தேடுதல் வேட்டையை நடாத்தும் போது, 'காலப்பருவத்தின்' பரிணாமத்தை அறிந்து கொள்ளவே முனைகின்றோம், என்பது, எமக்குத் தெளிவாகின்றது. எனினும் அக்காலத்தின் பரிணாமத்தை நன்கு விளங்கிக் கொள்வதற்கு, எமக்கு ஒரு சில தடயங்கள் தேவைப்படுகின்றன. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட கால வேளையின் "முன்னரான" அல்லது அப்பருவத்தின் "பின்னரான" ஒரு நிலைப்பாடு எமக்குக் குறிப்பாக வெளிப்படுத்தப் படுவதாயின் நாம் "காலத்தை"ப்பற்றி நன்கு அறிந்து கொள்வதில், எமக்குச்சிரமங்கள் ஏற்படுவதில்லை.

நாம் ஒரு காலப்பகுதியைப்பற்றி விபரிக்கும் பொழுது, உதாரணமாக:, 'கிறீஸ்துவுக்கு முன்பு', "கிறீஸ்துவுக்கு பின்பு" என்ற பதங்களைக் காலம், காலமாக, உபயோகித்து வருகின்றோம். இதன் காரணத்தால்தான் சரித்திர வாயிலாக வெளிவந்த பல வரலாற்று உண்மைகள், அவற்றின் சிறப்பு அம்சங்கள், அழகாகவும், ஒழுங்கான முறையிலும் எமக்கும், எம்முன் வாழந்தோருக்கும், எமக்குப் பின்புவரப்போகும் சந்ததியினருக்கும், விளக்கிக்கூறுதல் சுலபமானதாக அமைந்துள்ளது. நாம் காலத்தின் கோலங்களை மதிப்பீடு செய்வதற்கு, இப்படியான ஒரு "நிதர்சனமான கோடு" மையக்கல்லாக அமைந்திருக்க வேண்டும் என்பது இத்தால் மேலும் புலனாகின்றது. இதன் அடிப்படையில்தான், அக்காலத்தில் வாழ்ந்து வந்த எமது மூதாதையர் ஜீவித்த காலப்பருவம், அவர்கள் அநுஷ்டித்து வந்த நாகரீக முறைகள், பண்பாடுகள் அவர்களுடைய சமய வழிபாடுகள், போன்றன, எமக்குக் கிரமமான வரிசையில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

மானிட சமுதாயமானது, என்று உலகில் உருவானதோ, அன்று தொட்டே, அதனைப்பற்றிய விளக்கங்கள் அதுவிட்டுச் சென்றுள்ள, சுவடிகளின் தோற்றங்கள், எமக்குக் காலத்துக்குக் காலம் கிரமமாகக் காட்டப்பட்டுக் கொண்டே வருகின்றன.

இந்த வரிசையில் தான் இந்தியாவின் வடக்குப்பகுதியில் அக்காலத்தில் வாழ்ந்து வந்த சித்தர்கள் பற்றிய தடயங்கள் போன்றனவும், அக்காலத்தில் அவர்கள் வாழ்ந்து வந்த சிறப்பான வாழ்வு அவர்கள் மனிதகுலத்திற்கு விட்டுச் சென்ற சித்த மருத்துவம் போன்ற அம்சங்கள் பற்றிய எல்லாவித வரலாற்று விளக்கங்களும் எம்மை வந்தடைந்துள்ளன.

கிறீஸ்துவுக்கு முன்பு 2000ம் ஆண்டுகளுக்கும், 500 ஆண்டுகளுக்கும் உட்பட்ட காலம் இந்தத் தொன்மையான மருத்துவ முறையை எமக்கு ஈந்து சென்ற முனிவர்கள் வாழ்ந்த காலப்பருவம் எனத்தீர்க்கமாகக் கூறப்படுகின்றது. அம்முனிவர்கள், தங்கள் ஆழ்ந்த புத்திக்கூர்மையினாலும் நிதானமான அவதானத்தினாலும் ஆண்டவனின் அநுக்கிரஹத்தினாலும் கண்டறிந்து அன்று வெளிப்படுத்திய அந்தச் சித்த மருத்துவ பரிகரிப்பு முறைகள் அன்று தொட்டு இன்றுவரை மனிதகுலத்தைக்காப்பாற்றி வருகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். சித்தமருத்துவ அடிப்படையின் படி ஒரு ஜீவனில் மூன்று முக்கியமான சக்தி அம்சங்களாகிய வாயு, பித்தம்,கபம் என்பன சஞ்சரிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. அவை பஞ்ச மஹா

**பூதங்களாகிய:- ஆகாயம், வாயு, நீர், நெருப்பு, மண்**

என்பனவற்றின் சேர்க்கையால் உண்டானவை. எனவே அடிப்படைச் சக்தி அம்சங்களான வாதம், பித்தம், கபம் என்பவற்றின் செயற்பாடுகள் அவ் அவ் மஹா பஞ்ச பூதங்களின் பிரதிபலிப்பாகவே எமக்குக் காட்சிதருகின்றன. இந்த லக்ஷணங்களைக் கொண்டே சித்த மருத்துவன் நோயாளியின் வியாதிகளை ஓரளவு நிதானித்துக் கொள்ளுதல் சுலபமாகின்றது சாதாரணமான விகிதாசாரத்தின் படி நிலவும் நிலைமைகளில் மனிதனில் சஞ்சரிக்கும் இயற்கையின் ஆரோக்கியமான அமைப்பே அவனைச் சுமுகமான ஒழுங்கான கட்டமைப்பான பாதையில் இட்டுச் செல்லும் தன்மையுடையது. எனினும் இச்சக்திகள் தங்களுக்கேயுரித்தான விகிதாசார நிலைமையிலிருந்து மாறு பட்டுச் செல்லும் பொழுது மனிதனை நோய்கள் வந்தடைகின்றன. நோய்களின் தரம், அவற்றின் தன்மைகள் போன்றன சித்தமருத்துவனால் இனங்காணப்பட்டு அவற்றில் எந்த எந்த மஹாபூதங்களின் வெளிப்பாடுகள் காணப்படுகின்றன; அவற்றில் தென்படும் விகிதாசாரச் சேர்க்கைகள் எவ்விதம் அமைகின்றன என்பவை போன்றனவும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இப்படிக்கணிக்கப்படும் எல்லா அம்சங்களையும் ஒருங்கு கூட்டிப்பார்க்கும் போது, நோயின் பிரதான நிலைப்பாடு ஓரளவு புரியத்தொடங்கும். எனவே சிகிச்சையை ஆரம்பிக்கவும், மருத்துவ தோஷங்களால் மாறுபட்டிருக்கும் வாத, பித்த, கபம் என விபரிக்கப்படும் சக்திகளை இயற்கை நிலையில் நிலவ வேண்டிய நிலைப்பாட்டிற்கு இட்டுச்செல்வதற்குத் தன் பிரயத்தனங்களை ஆரம்பிக்கத் தொடங்குகின்றான்.

எங்கெல்லாம் நோய்களின் தன்மைகள் தெரிகின்றனவோ, அங்கெல்லாம் அவற்றிற்கு நேர் எதிரிடையான ஔஷதங்களைப் பிரயோகித்து வியாதிகளை விரட்டியடித்து, நல்லாரோக்கியமும் சந்தோஷமுமான நல்வாழ்வை நோயாளிக்கு அவன் நல்கி வருகின்றான்.

தொடரும்:-

**சித்த வைத்திய கலாநிதி, அல்போன்ஸ்**
**அத்தனாசியார் சில்லாவை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவம்

அலோபதி - ஆங்கிலம்

# உங்கள் எடையும் உடல்நலமும்

உங்கள் எடை எவ்வளவு ? உங்களுக்குத் தெரிந்திருக்கக் கூடும். ஆனால் பலருக்குத் தமது எடை எவ்வளவு எனத் தெரியாது.

குழந்தையாக இருந்தபோது கிளினிக்கில் நிறுத்துப் பார்த்தபின் இன்றுவரை அதனை அறிந்து கொள்ளாதவர்கள் இன்றைய காலகட்டத்திற் கூட இருக்கிறார்கள். தமது உடல் எடையை அறிந்து வைத்திருப்பதும், அதைச் சரியான அளவிற் பேணுவதும் ஒருவரின் ஆரோக்கியத்திற்கு முக்கியமானது என்பதைப் பலரும் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை என்பது கவலைக்குரியது.

"நான் மெலிஞ்சு போனன்" என வைத்தியர்களிடம் வரும் பல நோயாளிகளும் சொல்வதுண்டு.

நான் அவர்களை நிமிர்ந்து பார்ப்பேன். அப்படிச் சொல்பவர்களிற் பெரும்பாலானவர்கள் உண்மையில் மெலிந்திருப்பதில்லை.

"உங்களது இப்போதைய நிறை எவ்வளவு? முன்பு எவ்வளவாக இருந்தீர்கள்?

"நிறுத்துப் பார்க்கவில்லை. எல்லோரும் நான் மெலிந்து போனன் என்று சொல்கிறார்கள்."

அவர்களது எடை பார்க்கும் கருவி மற்றவர்களின் கண் பார்வைக் கணிப்புத்தான். சிலர் தங்களது கண்ணாடியையும் எடை பார்க்கும் கருவியாக எண்ணுகிறார்கள்.

இது முற்றிலும் தவறான முறை.

ஆனால் சிலர் "எனது சட்டைகள் வரவர இறுகிக் கொண்டு வருகின்றன" என்பார்கள். அல்லது "எனது காற்சட்டைட் லூசாகிக் கொண்டு வருகின்றது" என்பார்கள்.

நீங்கள் மெலிவதை அல்லது பருப்பதை இவை உங்களுக்கு உணர்த்தக் கூடும். ஆயினும் நிறையை அளந்து பார்ப்பதன் மூலமே உங்கள் தற்போதைய எடையையும், அதில் ஏற்பட்டு வரும் மாற்றங்களையும் சரியாகக் கணிக்கலாம்.

எனவே குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை உங்களை நிறுத்துப் பார்ப்பதுடன் நின்றுவிடாது அவற்றைத் திகதி வாரியாகக் குறித்து வைக்கவும் தவறாதீர்கள்.

உங்கள் இரத்த அழுத்தத்தையும், இரத்தச் சீனி அளவையும் அளவிடுவது எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு நிறையை அளவிடுவதும் அவசியமானதே.

## கட்டான உடல் அவசியம்

ஒரு காலத்திற் கொழுத்த புஸ்டியான உடல், ஆரோக்கியத்துடனும், உடல் அழகுடனும், செழிப்பான வாழ்க்கைத் தரத்துடனும் தொடர்புபடுத்தி வரவேற்கப்பட்டது. ஆனால் இன்றோ கொழுத்த உடல், நோய்களுடன் நெருங்கிய தொடர்பு உடையதாக அறியப்படுகிறது. இதனால் அது பயப்படும் அம்சமாகிவிட்டது.

உயரத்திற்கு ஏற்ற கட்டான உடலே எமது ஆரோக்கியத்திற்கு ஏற்றது.

மிக அதிகமான எடை கொண்ட பருமானன உடல் நோயின் அறிகுறி எனலாம்.

அதே போல மிக மெலிந்திருப்பதும், எடை குறைந்து செல்வதும் நோய்கள் காரணமாக இருக்கலாம். எனவே இவற்றுக்கான காரணத்தை அறிய மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம்.

## பருமனான உடலும் நோய்களும்

உயரத்திற்கு மீறிய எடை பல்வேறு நோய்களுக்குக் காரணமாகிறது. தற்காலத்தில் அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டும் மனிதர்களின் மரணங்களுக்கு முக்கிய காரணமாகின்ற நோய்களாக நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு, அஞ்சைனா போன்ற இருதய நோய்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இந் நோய்களுக்கும் பருமனான உடலுக்கும் நிறையத் தொடர்பு இருப்பதைப் பல்வேறு மருத்துவ ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன. அவர்கள் இரத்தத்தில் கொலஸ்டரோல் அடங்கலான கொழுப்புகள் அதிகமாயிருப்பதும், அதன் காரணமாக இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிந்து அவை சுருங்குவதுமே மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நோய்களுக்குக், காரணமாகிறது.

பித்தப்பைகற்கள், வயிற்றறைக்கும் நெஞ்சறைக்கும் இடையே தோன்றும் ஹயற்றஸ் ஹெர்ணியா, எலும்பு மூட்டுகளைத் தாக்கும் எலும்புச்சேதநோய் (OSTEOARTHRIS) போன்றவற்றிற்கும் பருமனான உடல் ஒரு முக்கிய காரணமாகின்றது.

**அதிகம் பருத்த உடலுடன் - தொடர்புடைய நோய்கள்**

1. மாரடைப்பு அடங்கலான இருதய நோய்கள்
2. உயர் இரத்த அழுத்தம்
3. நீரிழிவு
4. இரத்தத்தில் அதிகரித்த கொலஸ்ட்ரோலும் ஏனைய கொழுப்புகளும்
5. பித்தப்பைக் கற்கள்
6. மனச்சோர்வு நோய்
7. மலட்டுத்தன்மை
8. எலும்புச்சிதைவு நோய்
9. மார்பக, சூலக, கருப்பைப் புற்றுநோய்கள்
10. இரைப்பை நோய்கள்.

இவ்வளவு நோய்களுடன் தொடர்புடையதான எடையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்து தமது ஆரோக்கியத்தைப் பேணுவது ஒவ்வொருவருக்கும் அவசியம் அல்லவா ?

அமெரிக்காவில் 1996ற் செய்யப்பட்ட ஒரு மருத்துவ ஆய்வின் பிரகாரம் அங்கு நிகழும் 30,000 தடுக்கப்படக்கூடிய மரணங்களுக்கு அந்த உடற் பருமனே காரணமாகிறது. அத்துடன் அந்த உடற் பருமன் காரணமாக ஏற்படும் பல்வேறு நோய்களுக்காக அரசாங்கமும் நோயாளிகளும் மிக அதிகமாகச் செலவிடவும் வேண்டியுள்ளதாம்.

**ஆய்வு பயமுறுத்துகிறதா? பயப்படாதீர்கள்.**

நீங்கள் அந்த உடற் பருமன்கொண்டவராயினும் கூட உங்களுக்கும் அந்த ஆய்வு ஒரு நல்ல செய்தியையும் தந்திருக்கிறது.

அதிக உடற் பருமனுடையவர்கள் தமது எடையில் 5 அல்லது 10 வீதத்தைக் குறைத்தால் கூட அவர்களுக்கு மாரடைப்பு வருவதற்கான அடிப்படைக் காரணிகளான இரத்த குளுக்கோஸ் அளவு, இரத்தக் கொழுப்பு அளவு, இரத்த அழுத்தம் ஆகியனவற்றில் விரும்பத்தக்க மாற்றங்கள் ஏற்படும் என்பதே அந்தச் செய்தியாகும்.

நீரிழிவு நோயாளர்கள் தமது எடையிற் குறைக்கும் ஒவ்வொரு கிலோவும் அவரது வாழ்நாளை 3 முதல் 4 மாதங்களால் அதிகரிக்கும் என அதே ஆய்வு மேலும் கூறுகிறது.

சரி, அதிக எடை என்பது என்ன ? அதை எப்படிஅறிவது என்கிறீர்களா ?

உடல் வாகை நான்கு வகையாகப் பார்க்கலாம்.

1. மெலிந்தவர்கள்
2. சாதாரண எடையுள்ளவர்கள்
3. பருமனானவர்கள் (Over weight)
4. அதீத பருமனானவர்கள்(Obese)

## உங்கள் உடல்வாகு எத்தகையது?

மெலிவு, பருமன், அதீத பருமன் என்றால் என்ன? பருத்த உடல், அதீத பருமன் ஆகியன கண்பார்வைக் கணிப்பு அல்ல.

அது விஞ்ஞான ரீதியாகக் கணிக்கப்படுகிறது.

பருத்த உடல் இப்பொழுது உடல் திணிவுக் குறிப்பீடாக (Body mass index - BMI) ஆக இப்பொழுது அளவிடப்படுகிறது.

BMI என்பது என்ன ? அதை எவ்வாறு கணக்கிடுவது எப்படி என்கிறீர்களா?

BMI என்பதை நீங்களாகவே கணக்கிட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலாம். கிலோகிராமினால் ஆன உங்கள் எடையை மீட்டரினால் ஆன உங்கள் உயரத்தின் வர்க்கத்தினால் பிரியுங்கள். அதுதான் உங்கள் உடல் திணிவுக் குறிப்பீடாகும்.

BMI = எடை கிலோ கிறாமில் / உயரம் மீட்டரில் வர்க்கம்.

BMI 18.5 முதல் 25 க்கு இடைப்பட்டிருந்தால் அவரது எடை உயரத்திற்கு ஏற்றது, அதாவது சாதாரணமானது எனக் கொள்ளலாம்.

BMI 18.5 ற்குக் குறைவாயின் அவர் மெலிந்தவர்.
BMI 25 முதல் 30 க்கு இடைப்பட்டிருந்தால் அவர் பருமனானவர் (Over weight) எனலாம்
BMI 30 ற்கு மேலாயின் அவர் அதீத பருமனானவர். (Obesity) பருமனாயிருப்பது ஒருவரது உடல்வாகு மட்டுமல்ல அதுவே நோயுமாகும்.

அது இதய நோய்கள் உட்படப் பல்வேறு ஆபத்தான நோய்களுக்கு இட்டுச் செல்லும் என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

## உங்கள் உடல் வாகு எத்தகையது ?

மேலே குறிப்பிட்டது போலக் கணிக்கப்படுவது உங்களுக்குச் சிரமமாயின் உடல் திணிவுக் குறிப்பீடு அட்டவணை (கிட்டிய மதிப்பீட்டில்) கீழே தரப்பட்டிருக்கிறது அதனைப் பயன்படுத்தி உங்கள் எடை சரியானதா, அன்றிப் பருமனானதா, அதீத பருமனானதா என அறிந்து கொள்ளுங்கள்.

உடல் திணிவுக் குறிப்பீட்டு அட்டவணை
(கிட்டிய மதிப்பீட்டில்)

| நிறை கி.கி / உயரம் -(செ.மீ.) | 145 | 150 | 155 | 160 | 165 | 170 | 175 | 180 | 185 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 50 | 24 | 22 | 21 | 20 | 18 | 17 | 16 | 15 | 15 |
| 55 | 27 | 25 | 23 | 22 | 21 | 19 | 18 | 17 | 16 |
| 60 | 29 | 27 | 25 | 23 | 22 | 21 | 20 | 19 | 18 |
| 65 | 31 | 29 | 27 | 26 | 24 | 23 | 22 | 20 | 19 |
| 70 | 33 | 31 | 29 | 27 | 26 | 24 | 23 | 22 | 20 |
| 75 | 36 | 33 | 31 | 29 | 28 | 26 | 25 | 23 | 22 |
| 80 | 38 | 36 | 33 | 31 | 29 | 28 | 26 | 25 | 25 |
| 85 | 41 | 38 | 36 | 34 | 32 | 30 | 28 | 27 | 27 |
| 90 | 43 | 40 | 37 | 35 | 33 | 31 | 29 | 28 | 28 |

உங்கள் உடல் பருமனானது என வைத்துக் கொள்வோம். அதற்குக்காரணம என்ன?

எமது உடல் அதீத பருமனாக இருப்பதற்கும், அல்லது பருமனாகவோ அல்லது மெலிந்திருப்பதற்கும் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் முக்கியமானவை எமது உணவுப் பழக்கங்களும் எமது வாழ்க்கை முறையும் தான். பரம்பரை உடல்வாகும் காரணமாகலாம்.

எமது எடையைச் சரியான அளவிற் பேணுவது எப்படி?

உணவைக் குறைத்து உண்டால் சரியா?

விரதங்கள் இருப்பதன் மூலம் எடையைக் குறைக்கலாமா?

'அற்றது அறிந்து கடைப் பிடித்து மாறுஅல்ல
துய்க்க துவரப் பசித்து'
என வள்ளுவன் அன்று கூறியது இன்றும பொருந்துகிறதா?

அடுத்த இதழில் இவை பற்றிப் பேசுவோமே!

**Dr.** எம்.கே.முருகானந்தன் எம்.பி.பி.எஸ்

## ஆங்கிலம்

ஆங்கில மருத்துவத்தை உற்றுநோக்கும் பொழுது தற்கால உலகவாழ்க்கையில் இது மனிதனிடத்தே அதிகவிருப்பத்திற்குரியதாக காணப்படுகின்றது. இதன் கருத்து யாதெனில் மனிதன் தான் நோய்வாய்ப்பட்ட நேரத்தில் உடனடியாக அந் நோய்க்கு நிவாரணம் பெறக்கூடியதாகவும் நோயின் பூரணத்துவமான (**Alive**) தன்மையை (**x** மூலம்) உணரக்கூடியதாக உள்ளதே ஆகும். மற்றும் இதனை பொறுத்தவரையில் வைத்தியர்களுடைய புத்திமதிகள் உட்னுக்கு உடன் பெறும் தன்மையும், மருத்துவ வகைகளை பொறுத்தமட்டில் இலகுவாக பெறக்கூடிய தன்மை கொண்டதாகவும் உள்ளது. ஆதலால் ஆங்கில மருத்துவத்துறை ஆனது தற்கால உலகில் அதிக வனர்ச்சியும்,மக்களுடைய அபிமானத்தையும் பெற்ற ஒரு துறையாகக் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவம்

## ஹோமியோபதி

வியாதியின் அடிப்படைக் காரணங்களை ஹோமியோபதியின் தந்தை டாக்டர் ஹானிமன் "மியாசம்" (MIASM) என்று குறிப்பிடுகின்றார்.

மாதா, பிதா செய்வது மக்களுக்கு என்ற வாக்கிற்கமைய பரம்பரை, பரம்பரையாக சில நோய்களும் அவர்கள் மூலம் வந்து சேருகின்றன.

ஒவ்வொரு மனிதனும் இந்த மியாசத்தின் ஆளுகைக்கு உட்பட்டுத்தான் ஆகவேண்டும். அதனை எதிர்கொள்ளும் வலிமை, ஆற்றல், சுற்றுச்சூழல், மனநிலை, வாழ்க்கை நிலையைப் பொறுத்து வேறுபட்டிருக்கின்றது.

டாக்டர் ஹானிமன் இந்த மியாசத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார். அவையாவன "சோரா" (PSORA), சிபிலிஸ், (SYPHILIS), சைக்கொசிஸ். (SYCOSIS).

இவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனிக் குணக்குறிகள் உண்டு. இதன் அடிப்படையில் நோயாளி எந்த மியாசத்திற்குடையவர் என இனங்கண்டால், அந்த மியாசத்தின் சக்தியை முளையிலே கிள்ளி எறிந்தால் இவரைப் பிடித்திருந்த நோயும் அவரைவிட்டு அகன்று விடும்.

சோரா மியாசத்தில் மலச்சிக்கலும், சிபிலிஸ் மியாசத்தில் இரத்த பேதியும், சைக்கோசிஸ் மியாசத்தில் வயிற்றுப் போக்கும் காணக் கூடியதாக இருக்கும். டாக்டர் ஹானிமன் நோயாளியைத் தனிமைப்படுத்தி சிகிச்சையளிப்பது தவறு. நோய்க்கும், நோயாளியின் மனதிற்கும் சிகிச்சையளிக்க வேண்டும். அப்படிச் செய்வதால் நோய் நிரந்தரமாக மாறிவிடும் என்று ஹோமியோபதி வைத்தியத்தில் புலப்படுத்தியுள்ளார்.

### தலைவலி *(Headache)*

மனித வாழ்க்கை என்பது நீண்ட காலப் பயணம். இதில் இன்ப துன்பங்கள் மாறி மாறி வருகின்றன. சில வேளைகளில் துன்பங்கள் வந்து புயலாகவும் மாறுகின்றன. இதனால் மனக்கவலை, கோபம், அச்சம் டென்ஷன் **(Tension)** பசியின்மை-நித்திரையின்மை, தலைவலி போன்றவை தோன்றுகின்றன..

இன்று தலைவலி பெரும் பிரச்சினையாகவே உள்ளது. நிரந்தர நிவாரணம் கிடைக்காமல் மனித குலம் அல்லல் படுகின்றது.

சிலருக்குத் தலைவலி தொடர்ந்து இருந்து கண்பார்வையும் மங்கினால் மூளையில் கட்டி (BRAIN TUMOR) இருக்கலாம்.

சிலருக்குத் தலைவலி தொடர்ந்து 5, 10 வருடங்களாகவும் இருக்கலாம். அதிக நேரம் படித்தல் அதிக நேரம் கண் விழித்தல், படம் பார்த்தல் போன்றவற்றினாலும் வரலாம்.

இத் தலைவலிக்குச் சிலவகை மருந்து மாத்திரைகளைப் பாவிப்பவர்கள் சிலருக்கு ஒரு சில மணித்தியாலங்கள் மட்டுமே தற்கால சாந்திகிடைக்கின்றது. இதனால் நோயாளிகள் துன்பம் அனுபவிப்பதைக் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இதை மாற்ற முடியாதவர்கள் இதற்கு மிக்கிறேன் (MIGRAINE) என்ற நாமத்தையும் சூட்டிவிடுவார்கள்.

முக்கியமாக நீடித்த தலைவலி ஏதோ ஒரு நோயின் அறிகுறியே தவிர நோயல்ல என்று ஹோமியோபதி வைத்தியம் கூறுகின்றது.

மனித உடல் உறுப்புக்கள் பாதிக்கப்படும் போது கூட தலைவலி வரலாம். எந்த உடல் உறுப்புக்கள் பாதிக்கப் பட்டதோ அங்கே தான் நோய் தோன்ற வேண்டும் என்ற அவசியமில்லை. தலைவலிக்கு பல அரிய ஹோமியோபதி மருந்துகள் உள்ளன.

அவற்றுள் சில முக்கிய மருந்துகள் பின்வருவன: ACCONITE, BELLADONA, GLONOIN, BRYONIA, KALIPHOS, PODOPHYLLUM, ZINCUM, NUXVOMICA.

**டாக்டர் எம்.வி.தில்லைச்சந்திரன்**
அரசாங்க பதிவுபெற்ற ஹோமியோபதி வைத்தியர்

### மனித உடல் பற்றிய தகவல்கள் சில

மனித உடலின் சராசரி வெப்பநிலை 98.4°F (36.8°C)
மனித குருதி வகைகள் A, B, AB, O
சராசரி மனிதனின் நாடித்துடிப்பு நிமிடத்திற்கு **72** தடவைகள்
மனித உடலின் சராசரி இரத்த அளவு **4** லீற்றர்
உமிழ்நீர் சுரப்பிகளின் எண்ணிக்கை 3 கோடி
மனித உமிழ் நீரிலுள்ள நொதியங்கள் தயலின், அமிலேசு
முதிர்ச்சியுள்ள மனிதனின்
மொத்த எலும்புகளின்எண்ணிக்கை **206**
மிகச்சிறிய எலும்பு செவிச்சிற்றெலும்பு
மனிதனில் குரோமோசோம்களின் தொகை **23** கோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிடமும் மனிதவாழ்க்கையும்

ஜோதிடம்

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும், விதி என்னும் இறைவனுடைய எற்கனவே தீர்மானிக்கப்பட்ட வரைமுறைக்குட்பட்டது என்பதை எல்லாரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதைத்தான் கீதை ("எது நடந்ததோ.....") சொல்கிறது" என்கிறார் யோகர் சுவாமிகள் கூட எப்பவோ முடிந்த காரியம் என்கிறார். ஆகவே விதி, ஜோதிடம் என்பன ஐயங்களுக்கு அப்பாற்பட்டன. அதாவது ஒருவரது பாவ புண்ணியங்களுக்கு எற்ப இறைவனால் விதி என்னும் கோட்பாட்டால் எழுதப்பட்டுள்ளது என்பதை யாவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த விதி என்னும் தனி மனிதனுடைய எதிர்காலத்தில் முன் கூட்டியே கூறும் ஜோதிடம் என்பது இலகுவான ஒன்றல்ல. அதாவது அத்தகைய சாஸ்திரம் பல்லாயிரக்கணக்கான கொள்கைகளுக்குட்பட்டிருக்கவேண்டும். இவை எல்லாவற்றையும் மனதில் நிலைநிறுத்தி அதாவது கணனிப்பொறி (கம்பியூட்டர்) எப்படி எல்லாவற்றையும் தன்னகத்தே நிலைநிறுத்தி (ஸ்டோர் பண்ணி) வைக்கப்பட்டவற்றை அதற்கு தரவுகள் (DATA) கொடுக்கப்படும போது சரியாக மீட்டுக்கொடுக்கிறதோ அதுபோலவே ஜோதிடரும் எல்லாவற்றையும் உள்ளுணர்வுகளில் நிலை நிறுத்துவது அவசியமாகின்றது. எனவே ஒரு ஜோதிடரைப் பொறுத்தவரை அவரது உள்ளுணர்வுகள் சரியாக இல்லாதவரை அவரது ஜோதிடங்கள் சரிவருவதில்லை.

அது தவிர சில ஜோதிடர்களுக்கு ஒரு சில காலம் வரை அவர்களுடைய கணிப்புச் சரியாக-விருக்கும். அப்புறம் அவர்களுடைய ஜோதிடம் பலிப்பதில்லை. அதாவது ஜோதிடரின் உள்ளுணர்வு எப்பொழுதெல்லாம். சரியாக இயங்குவதில்லையோ அப்பொழுதெல்லாம் தப்பாக அமைந்து வரும் எனப்படுகிறது.

ஜோதிடரின் உள்ளுணர்வு சரியாக வேலை செய்ய மனம், வாக்கு காயம் மூன்றையும் ஒரு வழிப்படுத்திச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கோபம் குரோதம், பொறாமை. வெறுப்பு, பணஆசை, கர்வம், ஆத்திரம் படபடப்பு, அவசரம், இறுமாப்பு, ஆணவம் இவைகள் ஒரு ஜோதிடரின் உள்ளுணர்வு அலைகளைப் பாதிக்கும். மன அமைதி, அடக்கம், பணிவு, பதற்றமின்மை, தெளிவானமனது, எதற்கும் அவசரமின்மை, உண்மையான திறமை, புரிந்துணர்வு இவற்றுடன் முக்கியமாகத் தெய்வபக்தி இவைகளை கொண்ட ஜோதிடர்களே இத்துறையிற் சிறந்துவிளங்குவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

அதனால் தான் குலதெய்வத்தை உபாசித்து ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் சோதிடம் அருள் வாக்கு என்றும் வேறு சில பெயர்களாலும் குறிப்பிடுவார்கள் சொல்வதற்காக மனதை ஒருவழிப்படுத்தித் தியானத்தில் அமரும் போது மனம் ஒருவழிப்பட்டு இறைவனிடம் செல்கிறது.

இந்த இடத்தில் சங்கரபகவத்பாகதா கூறிய "தர்மம்" என்ற நூலில் இடம் பெற்ற ஒரு பந்தியை தருவது சாலப் பொருந்தும். அன்றாடம் ஜோதிடம் சொல்கின்ற ஜோதிடங்கள் ஜோதிடம் சொல்லும்போது நவக்கிரங்களின் நிலை சரியில்லை, மோசமானவை கெடுதல் செய்கின்றன. இது நிசம் இது சத்ரு என்று கூறும் போது நவக்கிரங்களின் பழிக்கு ஆளாகிறார்களாம். இந்தத் தோஷத்தை நிவர்த்திக்க ஜோதிடர்கள் தினசரி சூரிய நமஸ்காரம், விநாயகர் வழிபாடு நவக்ரகமூல மந்திரம் ஐபம் செய்தல் வேண்டும் என்கிறார். மேலும் அவரது நூலில் "அப்படிச் செய்வதனால் ஜோதிடர்களின் தோஷம் நீங்குவதுடன் தெய்வ அனுக்கிரகமும் கிட்டுவதால் அவர்களுடைய ஜோதிடம் பலிக்கும" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எட்கர் தேசி" என்னும் அமெரிக்கர் கூறுகிறார் "மனிதனது ஆறாவது அறிவைப் பயிற்சி மூலம் இயக்குவதால் ஒருநிலைச் சென்று வருங்காலத்தைச் சரியாக கூறமுடியும்" என்று இவர் இவ்வழியில் தனது இறுதி வாழ்க்கை வரை கூறியது எதுவும் இம்மியளவும் தப்பாகவில்லை.

ஆகவே ஜோதிடம் என்பது உண்மையான விஞ்ஞானம் அப்படியானால் ஜோதிடம் பலிக்கவில்லை என்று யாராவது சொன்னால் அதற்குககக எங்கோ தவறிருக்கின்றது என்று அர்த்தம் (SOMETHINGWRONG SHOMEWHERE)

ஜோதிடம் பலவகைப்படும்

பிறந்த ஜாதக கிரக ஜோதிடம்

கைரேகை ஜோதிடம்

காண்டம்

நாடி ஜோதிடம்

ஆருடம் (சோகி) ஜோதிடம்

பெருவிரல் அடையாள ஜோதிடம்

பட்சி ஜோதிடம்

இன்னும் பல

இவற்றில் ஒவ்வொரு ஜோதிடமாக தர உள்ளோம். இதன்படி முதன் முறையாகக் கைரேகை ஜோதிடம் பற்றிப்பார்ப்போம்

## கைரேகை சாஸ்திரம்

கையில் எத்தனையோ பாகம் அதாவது புறங்கை, உள்கை என உள்ளது. ஆனால் உள்கையை உள்ளங்கை என்றுதான் கூறுவார்கள் உள்ளத்தைக் கண்ணாடி போல் காட்டும் கை என்பாதல் தான் அப்படியிருக்க வேண்டும். இந்த கை ரேகை சாஸ்திரம் ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன் இருந்தே கிரேகம், எகிப்து மற்றும் உலகின் பலபாங்களிலும் நடைமுறையில் இருந்து வந்திருக்கலாம் கெய்ரோ எனும் இங்கிலாந்து நாட்டுப் பிரபு ஒருவர் அரசவாழ்க்கையை விட்டுக் கைரேகை ஆராய்ச்சியில் ஈடுபட்டுவந்து நிறையப்புத்தகங்கள் எழுதியிருக்கிறார்.

ஒருவருடைய வாழ்க்கை சரிதத்தை எப்படி அவனது கைரேகை பிரதி பலிக்கும் என்பது நமது அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டது கை ரேகை சம்பந்தப்பட்ட நிறைய புத்தங்கள் 17ம் 18ம் நூற்றாண்டுகளில் தான் வெளிவர ஆரம்பித்தன. அதற்கு முதல் இது குரு சிஷ்யர் வழியே சொல்லப்பட்டு, பயிலப்பட்டு, அனுபவரீதியாக ஆராய்ச்சி செய்யப்பட்டு அல்லது உரைக்கப்பட்டுவருந்திருக்கலாம், இது எமது கணிப்பு. கைரேகை சாஸ்திரமானாலும் வேறு எதுவானாலும் இதைச் சொல்பவர் (ஜோதிடர்) தெய்வபக்தி, தியானசுத்தி, உடையவராயும் கேள்வி, கல்வி, அனுபவ, ஆராய்ச்சி ஞானம் உள்ளவாரயுமிருக்க வேண்டும் ஒருவரைப் பார்த்தவுடன் உருவ அமைப்பு பொது அமைப்பு, குணாதிசயம் ஜாதக கைரேகை அமைப்பு இவற்றின் மூலம் அவரைப்பற்றி சில விஷயங்கள் படிக்க கூடிய வராயிருக்கவேண்டும்.

இனி கைரேகை சாஸ்திரத்தைப் பற்றிப் பார்ப்போம் உள்ளங்கை நிறம் சிவந்திருந்தால் நல்ல தேகாரோக்கியம் உடையவராகவும் கருணை உள்ளவராகவும் இருப்பார்.

உள்ளங்கை உஷ்ணமுடையவர்கள் அல்லது அழுத்தமான கைகளை உடையவர்கள் திடமான மனப்பாங்கு உடையவர் குளிர்ச்சியான கை கொண்டவர்கள் உள்ளத்தில் திடமின்மையும் அச்சத்தையும் கொண்டிருப்பார்கள். மேலும் உள்ளங்கை அமைப்பு கோழிமுட்டை அல்லது ஓவல் அமைப்புள்ளவர்கள் சுறு சுறுப்பானவர்கள் ஆனால் மென்மையாகப் பேசுவார்கள். அடக்கமானவர்கள் கலை உள்ளம் நிரம்பியவர்கள். நிள்சதுர அமைப்பு உள்ளவர்கள் ஆழ்ந்த சிந்தினை உள்ள சிறந்த அறிவாளிகள். தேகாரோக்கியம் உடையவர்கள் விரல்நுனி தடித்தும் கனுவில்முடிச்சு விழுந்த தாயும் ஆள்காட்டி விரலும் சின்ன விரலும் ஒன்றுக்கொன்று எதிராக வளைந்திருந்தால் இலட்சியவாதிகள், உழைப்பாளிகள். உள்ளங்கை விரலளவு இருந்தால் சிறந்த அறிவாளிகள் திறமைசாலிகள். உள்ளங்கை விரலை விட அதிகமாக இருந்தால் சுயநலவாதிகளாகவும் காரியவாதிகளாகவும் பணமேகுறியாக இருப்பார்கள் விரலை விடகுறைவாக இருந்தால் திட்டமுள்ளவர்கள். ஆனால் அதைச் செயலாற்றத் தயக்கமானவர்கள் இவை பொதுவான கருத்துக்கள். அதாவது" வானிலை அறிக்கைபோல மழை பெய்யலாம், பெய்யாமல் விடலாம். இனிக் கைரேகைகளில் உள்ள முக்கிய மேடுகளை அடுத்த இதழில் பார்ப்போம் - தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த குணம் எது?

பொதுப் பகுதி

பூமித்தாயை, வர்ண புத்திரன் பல நாட்களாக எட்டிப்பார்க்கவில்லை. மகனைக் காணவில்லையே, காணவில்லையே எனத் தாயின் மனம் துடித்துக்கொண்டிருந்தது. மகனைக்காணாத துன்பத்தினால், உள்ளம் மட்டுமல்ல தாயின் உடலும் நாளுக்கு நாள் வாடத்துவங்கிவிட்டது. முகத்தில் செழுமையில்லை. பசுமை கருக்கத்துவங்கிவிட்டது. எங்கோ வெகு தூரத்துக்கு அப்பால் வழியில் சந்தித்த வாயுதேவன் வர்ணனின் காதில் இந்தச்செய்தியைச் சொல்லிவிட்டான். வர்ணன் துடித்துப் போய்விட்டான். வுாயுதேவனைப் பின் தொடர்ந்து ஓடோடி வந்தான். தாயின் மடியிற் குதித்துக் களி நடனம் புரிந்தான்.

பூமித்தாயின் மனம் குளிர்ந்தது.!

வயல்களில் மழை : கானகத்தில் மழை. இன்று குளங்கள் நிரம்பி வழிந்தன. மலைப் பகுதிகளில் பெய்தகடும் மழையின் வெள்ளம் பள்ளத்தை நோக்கிப் பாய்ந்து வந்தது. வற்றிப்போன சுவடே தெரியாமல், கொதிமணலாக இருந்த ஆறு உயிர் பெற்று விட்டது: மரஞ்செடி கொடி இவற்றை உருட்டிக்கொண்டு அந்த ஆறுவீறு கொண்டு சீறியபடி வேகமாகப் பாயத்துவங்கிவிட்டது. ஆற்றின் இரு புறமும் ஏழைகள் வாழும் கிராமங்கள்: அந்த ஏழைகளின் சிறு சிறு குடிசைகள்: ஆற்றின் வேகம் கரைகளை உடைக்கத் துடிக்கிறது. வெள்ளம் அகலக் கால் வைப்பதற்கு எத்தனிக்கிறது. குழந்தைகளையும், வயோதிபர்களையும் அப்புறப்படுத்திவிட்டுக் கையில் அகப்பட்டவற்றை அள்ளிக்கொண்டு பாதுகாப்பான இடத்திற் சேர்ப்பவர்கள் ஒரு புறம் உடல் வலுவுள்ள ஆண்களும், பெண்களும் மண்வெட்டி, கூடைகள் ஏந்தி ஆற்றின் வேகத்தைத் தோற்றுப் போகச் செய்யும் வகையிற் சுறுசுறுப்பாகி அணைகளை இறுக்கமாக அமைத்து, வெள்ளநீரை வயல் வெளியின் பள்ளத்தில் உள்ள வாவியை நோக்கிப் பாயச் செய்கிறார்கள். வாவியில் தங்கியிருக்கப் போகிற நீர் மழையில்லாக் காலத்திலும் அவர்களின் வயல் பாசனத்துக்கும் கை கொடுத்து உதவத்தான் போகிறது. உரிய வேளையில் கூட்டு முயற்சியாக அவர்கள் அணைக்கட்டாது வெள்ளத்தின் போக்கிற்கே அதனை விட்டிருந்தால் எத்தனை அனர்த்தங்கள் அங்கு ஏற்பட்டிருக்கும்?

மனிதர் ஒவ்வொருவரும் இதைச் சிந்திக்க வேண்டும் மனிதன் உணர்வுகளைத் துறந்தயோகி அல்ல: உடல் உணர்வுகள், உள்ளத்து எழுச்சிகள் முதலியவை கொண்டவன் மனிதன். எனினும் அவன்மனம் நல்லவற்றை நாட வேண்டும் : கெட்ட உணர்வுகளை, தனக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு ஏற்படக்கூடிய உணர்வுகளைக் கட்டுப்படுத்தவேண்டும். மனிதனிடம் உள்ள கோப உணர்வு பெரிய தீங்கு விளைக்கக் கூடியது. அது அவனுடைய உடம்பின் இரத்த நாளங்களைப் பாதிக்கின்றது. சிந்தனைத் திறத்தை ஊறுபடுத்துகின்றது. அவனுடைய மதிப்பையும் மரியாதையையும் கெடுக்கின்றது: கோபத்தினாலே மற்றவர்களுக்கு மனநோவையும் அவமானத்தையும் மட்டுமல்லாமல் சில வேளைகளில் மற்றவர்களின் உடலுக்குப் பாரிய நஷ்டத்தையும் ஏற்படுத்தலாம், அதன் மூலம், அவன் பெரிய குற்றம் இழைத்து, தான் துன்பப்படுவது மட்டுமல்லாமல் அவனது குடும்பம், அவனுடைய கோபத்தினால் பாதிக்கப்பட்டவனுடைய குடும்பம், உறவினர்கள், ஆகியோரையும் வாழ்நாள் முழுவதும் துன்பத்திலே தள்ளுகின்ற கொடுமையைச் செய்தவனாகின்றான்.

அநீதியைக் காணும் போது ஆவேசம் பிறப்பது இயல்பு: அவமானப்படுத்தப்படும் வேளையில் சினம் சீறி எழும். ஆனால் மனிதன் மிருகம் அல்ல, அடிப்பது, உதைப்பது, கடிப்பது, காட்டுமிருகங்களின் தினசரித் தொழில்: ஆறாவது அறிவென்ற பகுத்தறிவு -சிந்திக்கும் திறம் அற்றவை மிருகங்கள். அறிவின் மூலம் தெளிவாகச் சிந்தித்துச் செயலாற்றுவதே மனிதனுக்குரிய தன்மை. கொதித்து எழுகின்ற கோபத்தை அடக்கிக் கட்டுப்படுத்துகின்ற குணமே மனிதனிடம் இருக்க வேண்டிய மிகச் சிறந்த குணமாகும்.

"உள்ளங் கவர்ந்து, எழுந்தோங்கு, சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணம் என்க - வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுதல் அரிதோ விளம்பு"

(நன்னெறி)

தமிழ் ஒளி என். சோமகாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்நாடக சங்கீதமே மேன்மையானது

பல்துறை

ஆங்கிலத்தில் : ஸீ.வீ.நரசிம்ஹன்
தமிழில் : பல்கலைப் புரவலர் நவாலியூர் நா. சச்சிதானந்தன்

கர்நாடக சங்கீதம் பற்றிப்பேசும்பொழுது நான் முற்று முழுதான வெறிகொண்ட பற்றுடையவனாகி விடுகிறேன். அதை எளிமையாகக் கூறுவதாயிருந்தால், "கர்நாடக சங்கீதமே மேன்மையானது; அது ஒரு சமுத்திரம்; ஒரு ஸ்வரார்ணவம்;" எனத் தியாகராஜ ஸ்வாமிகள் கூறியது போல் நான் கருதுகிறேன். நாம் அதைப் பணிவமைதியுடன் அணுகுதல் வேண்டும். காளிதாஸர் கூறியவாறு, அது ஒருவர் சமுத்திரத்தை ஒருதுடுப்புப் படகு மூலம் கடக்க முயல்வதைப் போலாகும்.

கர்நாடக சங்கீதத்தைப் பற்றிய எனது இத்தகைய கொள்கையை நான் நியாயப்படுத்த இயலுமா? மேற்கத்திய சங்கீதத்துடனும், ஹிந்துஸ்தானி சங்கீதத்துடனும் நான் அதை ஒப்பிட்டால் என்னால் அது இயலுமென நான் எண்ணுகிறேன்.

1934 இல் நான் ஒக்ஸ்போர்ட்க்குச் சென்றபொழுது பல்லிய இசை, இசைநாடகம் ஆகியன சார்ந்த மேற்கத்திய சங்கீதத்தில் நான் ஆர்வம் கொண்டேன். இருபதாம் நூற்றாண்டின் மேற்கத்திய சங்கீதக் குழு இயக்குநர்களுள் மேன்மைமிக்கவரென ஒருகாற் கொள்ளக்கூடியவரான ஆர்ட்டியூரோ ரொஸ்கானினியால் இயக்கப்பட்ட பி.பி.ஸீ. சிம்ஃபனி ஒக்கெஸ்ட்ராவின் இசை நிகழ்ச்சியே எனது இசை அனுபவத்தின் உச்ச நிலையாகும். அவரைப்பற்றி ஒரு கதை கூறுவார்கள். நாற்பது தொடக்கம் ஐம்பது வயலின் கலைஞர்கள் கலந்துகொண்ட ஒரு வாத்திய (பல்லிய) இசை ஒத்திகையின்போது ரொஸ்கானினியின் ஒலிமந்தமாக்கும் கருவியை (Mute) அகற்ற மறந்து விட்டார்கள். "ஒலிமந்தமாக்குங் கருவி எனக்குக் கேட்கிறது" என ரொஸ்கானினி கூறினாராம்.

கார்ள் றோசா ஒப்பரா கம்பனி ஒவ்வொரு இளவேனிற் காலத்திலும் ஒரு வாரத்துக்குச் சிறப்பான இசைநாடகங்களை நடத்தும். கார்ட்டே ஒப்பரா குரூப் கில்பேட் அன்ட் சுலிவன், (Gilbert and Sullivan) இசை நாடகங்களை அளிக்கும். இவையெல்லாவற்றையும் நான் ரசித்தேன். இது அறுபது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்துக்கு முன்பு.

பின்பு 1959 இல் நான் ஐக்கியநாடுகள் சபையில் நேருதவிச் செயலாளர் நாயகமாகக் (UNDER SECRETARY GENERAL)கடமையாற்ற நியூயோர்க்குக்குச் சென்றேன். செயலாளர் நாயகத்தின் அழைப்பின்பேரில் ஒவ்வொரு ஆண்டும் ஐக்கிய நாடுகள் தினமான ஒக்டோபர் 24 இல் யாராவது ஒருமாபெரும் பல்லியக் குழுவினர் ஐக்கியநாடுகள் சபையில் இசைநிகழ்ச்சி அளிப்பார்கள். அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளின்போது, இயூஜீன் ஓமண்டி, ம்ராவின்ஸ்கி, மற்றும் எமது சூபின் மேத்தா போன்ற இயக்குநர்களின் கீழ் நடைபெற்ற சில மாபெரும் பல்லிய இசை நிகழ்ச்சிகளை நான் கேட்கக் கூடியதா யிருந்தது. தனிவயலின் கலைஞர்களான ஜாஸ்ச்சா ஹெய்ஃபெற்ஸ், டேவிட் ஒயிஸ்ராக், யெஹூடி மெனூஹின், ஸெலோ (Cello) இசைக் கலைஞர்களான பப்ளோ காசல்ஸ், ம்ஸ்ரிஸ்லாவ் றொஸ்ட்ரோபோவிற்ச் ஆகியோரின் இசையையும் நான் கேட்டிருக்கிறேன். இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் வயலின் கலைஞரான ஃபிரிற்ஸ் கிரெய்ஸ்லர், பியானோக் கலைஞர் வ்ளாடிமிர் ஹெறோவிற்ஸ் ஆகியோரின் இசையையும் நான் கேட்டுள்ளேன்.

ஐக்கியநாடுகள் சபையில் நான் இருந்த காலங்களில், மெட்ரோ பொலிற்றன் ஒப்பராவின் முகாமையாளரான றடோல்ஃப் பிங் என்பவரை நண்பனாகக் கொண்டது எனது பாக்கியமாகும். அதன் காரணமாக, மெட்ரோபொலிற்றனில் பலவருடகாலப் பகுதியின்போது உலகப் புகழ்பெற்ற ஸொப்ரானோக்களான (Soprano) பிரிஜிற் நில்சென், மற்றும் உச்சக்குரலிசை வல்லுனரான (Tenor) லூஷியானோ பவரோட்டி ஆகியோரின் இசையையும் மெட்ரோபொலிற்றனின் மற்றைய தயாரிப்புக்களையும் ரசிக்க ஏதுவாயிற்று. மேற்கத்திய இசைப்பல்லியம் வெளிக்கொணரும் சிறப்பு வாய்ந்த ஒலிபோன்று மாட்சிமிக்க ஒலிவேறெதுவும் இருக்க முடியாதென இச்சந்தர்ப்பத்தில் நான் கூறுவேன். பல்லிய இசையின் அடிப்படை அம்சமான பல்பண்திற ஒருங்கிசைவு எம்மிடமில்லை என்பதையும் நான் ஏற்றுக்கொள்ள வேண்டியவனாகிறேன். எப்படியிருப்பினும் எமது இசைமுறை ஒத்திசைவான குரல் எடுப்புடையது. ஒரு கச்சேரியிலோ, பஜன் நிகழ்ச்சியிலோ எல்லாக் குரல்களும், வாத்தியங்களும் ஒரே ஸ்ருதியை (ஸ்வரப்பண்பு) உபயோகிக்கின்றன. நான் கேட்ட பாடகர்கள் எவரும் சுத்தமான ஸ்வரப் பண்பியல்பையும், சிறந்த மேற்கத்திய இசை நாடகப் பாடகர்களின் வேறுபாடற்ற ஒலிக்கனத்தையும் ஒன்றிணைத்து இசைத்ததை நான் கேட்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாவற்றையும் நான் ஏற்றுக்கொண்டு, குறிப்பிட்டுக் கூறுவது யாதெனில், மேற்கத்திய இசையில் மனோதர்ம சங்கீதம் என்ற அம்சமில்லை என்பதாகும். சாஹித்திய கர்த்தாவே ஸ்வரக்குறிப்பையும் எழுதி இசைக்கப்படவேண்டிய வேகத்தையும் (காலம்) குறிப்பிட்டிருப்பார். வெவ்வேறு இயக்குநர்களின் வெவ்வேறு விளக்கங்களைப் பற்றி விமர்சகர்கள் எழுதுவார்கள். ஆனால் இது மிகக் குறுகிய எல்லைகளுக்குள்ளேயே இடம்பெறும். இந்த ஒரு காரணத்துக்காகவே - அதாவது, இசைக் கலைஞர்களுக்குக் கிடைக்கக்கூடிய சங்கீதஞ்சார் கற்பனைகளுக்குரிய சுதந்திரம் என்ற மட்டில் - மேற்கத்திய சங்கீத முறையைக் காட்டிலும் கர்நாடக சங்கீதமுறை மேலோங்கி நிற்கிறது.

ஹிந்துஸ்தானி சங்கீதம் எத்தகையது? கர்நாடக சங்கீதமும், ஹிந்துஸ்தானி சஙகீதமும் பொதுவான தோற்றுவாயைக் கொண்டவை. அவற்றின் இலக்கணமும் ஏறத்தாழ ஒரே மாதிரியானது. இராகமே இவையிரண்டினதும் முதுகெலும்பு. குரற்பண்பு, ஸ்ருதி சுத்தம், சிறப்பாக, அடிப்படையான ஸ - ப - ஸ வில் மாத்திரமன்றி இடைஸ்வரங்களிலும் அமையும் ஸ்ருதி சுத்தத்தில் - வட நாட்டிசை கர்நாடக இசையைக் காட்டிலும் மேலோங்கி நிற்கிறது. ஆனால் இரு தொடர்புபட்ட பரப்பெல்லைகளில், உதாரணமாக - முதலில் இராகங்களை எடுத்துக் கொண்டால் - கர்நாடக சங்கீதம் மிகக் கூடிய நுணுக்கங்களைக் கொண்டிருப்பதோடு, விஞ்ஞான பூர்வமான வளர்ச்சியையும் பெற்றிருப்பதால், அதிலே நிறைய ஜன்ய இராகங்களுள்ளன. இரண்டாவதாகக் கர்நாடக சங்கீதத்திலுள்ள அம்சம், ஸாஹித்தியம். கடந்த இருநூற்றாண்டுகளில், பெரும் வாக்கேயகாரர்கள் தமது விரும்புக்குரிய தெய்வங்கள் - இஷ்ட தெய்வங்கள் - மேல் பக்தி மேலீட்டினாற் பாடிய ஆயிரக்கணக்கான ஸாஹித்தியங்கள் உள்ளன.

இத்தகைய ஸாஹித்தியங்கள், க்ருதிகள் என்ற வடிவத்தில், ஸ்வரங்களின் இசைவுப்படிமுறை ஏற்ற இறக்கங்களுடன் அமைந்த நுணணிய அணிகளான ஸங்கதிகளுடன், இராகங்களின் முழு அழகையும் வெளிக் கொணரும் வகையிலும், ஸாஹித்திய பாவத்தை அதிகரிப்பனவாகவும் அமைக்கப்பட்டுள்ளன. எனது கருத்தின் பிரகாரம், மிக உச்ச நிலையிலான சங்கீதானுபவமாமனது, பாடும் அல்லது வாசிக்கும் கலைஞரின் அலைநீளத்தில் ரசிகரும் நிற்பதோடு, ஒப்புயர்வற்ற புற நிலையுணர்வு கடந்த நிலைக்குச் சென்று எல்லையற்ற பரவெளியுடன் அவர் ஒன்றி நிற்பதுமாகும்.

முன்னேகூறப்பட்டதைத் தொகுத்துரைப்பதாயின், கர்நாடக சங்கீதம் மேம்பாடுடையதென நான் கூறுவதற்கு இரு காரணிகள் உள. எண்ணற்ற இராகங்களும், அதன் பல்கூட்டுத்தொகுதியான நுணுக்கங்களும், எமது செவிக்கும் உள்ளத்துக்கும் இனிமையளிக்கும் க்ருதிகளுமே அவை.

கர்நாடக சங்கீதத்தின் இன்னொரு அம்சத்தையும் நான் குறிப்பிட வேண்டும். அதுவே லயம் - தாளம் என அழைக்கப்படும் காலப்பகுப்பு. நூல்களின் பிரகாரம் ஏழு தாளங்களும் ஐந்து கதிகளும் இணைந்து முப்பத்தைந்து இணைப்புக்கள் உள்ளன. நடைமுறையில் அதிகமான க்ருதிகள் அரை டசின் தாளங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைவிட 108 தாளங்களுமுள்ளன. கலைஞருக்கும் ரசிகர்களுக்கும் காலப்பகுப்பைக் கடைப்பிடிப்பது சுலபமாயிருக்கும். ஆயினும் இராகம் - தாளம் - பல்லவி இசைக்கப்படும் பொழுது, தாள அமைப்பு மிக நுணுக்கமானது. அணிசெய்யும் தாள வாத்தியக் கலைஞர் வழமையாக மிருதங்கக் கலைஞர் (தவில் கலைஞரும்) சில கணித அற்புதங்களை வெளிப்படுத்திக் காட்டுவார். இதைக் "கணக்கு" எனக் கூறுவார்கள். தனி ஆவர்த்தனம் என வரும்போது பிரதான தாளவாத்தியக் கலைஞர் (மிருதங்கக் கலைஞர்) கஞ்சிரா, கடம், மோர்சிங் எனப்படும் உபதாள வாத்தியக் கலைஞர்களுடனும், சில வேளைகளிற் கொன்னக்கோல் கலைஞருடனும், விறுவிறுப்பான தாளப் பகுப்புப் பரிமாற்றத்தை மேற்கொள்வார். கொன்னக்கோல் என்பது மிருகங்கத்தில் அல்லது மற்றைய தாள வாத்தியங்களில் வாசிக்கப்படும் சொல்கட்டை வாயினாற் சொல்வதாகும். லயம் என்ற அம்சத்தில், கர்நாடக சங்கீதத்துக்கு இணையானது எதுவுமில்லை. கர்நாடக சங்கீதத்தில் உபயோகிக்கப்படும் தாளவாத்தியங்களும் எண்ணிக்கையில் அதிகம். கர்நாடக சங்கீதத்திலே மண்ணினாற்செய்யப்பட்ட பானை, கடம் என்ற பெயரில் உபலயவாத்தியமாக உபயோகிக்கப்படுகிறது.

கர்நாடக சங்கீதத்திலே தான் இந்த நாட்டுக்குரியனவல்லாத வாத்தியங்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன. வயலின் ஒரு சிறந்த உதாரணம். வீணையைப் போன்று தொனிக்கும் வகையில் மண்டலின் என்னும் மேனாட்டு வாத்தியத்தை வாசிக்கக்கூடிய ஒரு சிறந்த கலைஞர் கர்நாடக சங்கீதத் துறையிலே தான் உள்ளார். காற்று வாத்தியங்களுள் மேனாட்டு வாத்தியங்களான கிளாரினெட், சாக்ஸோ ∴ போன் போன்றவற்றில் கமகங்களைத் தொனிக்க வைக்க முடியாதவாறு நிலையான தடுப்பு அமைப்புகள் இருந்த போதிலும், கர்நாடக இசைக் கலைஞர்கள்அவற்றில் கமகம் பேசும் வகையில் வாசிக்கிறார்கள்.

இதுவரை, கர்நாடக சங்கீதம் மேன்மையானதென்பதற்குரிய ஆதாரங்களைத் தந்துள்ளேன். எமது சபாக்களும், கலைஞர்களும், விமர்சகர்களும், ரசிகர்களும், பத்திரிகைகளும் இலக்ட்ரோனிக் ஊடகங்களும் கர்நாடக சங்கீதத்தின் பெருமைமிகு வரலாற்றை மேலும் உயர்த்தத் தம்மாலானவரை முயல வேண்டும்.

நன்றி : "SRUTI"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டுகோள்

பேரன்புக்குரிய வாசகப்பெருமக்களே!

எமது "ஞான அறிவுச்சுடர்" சஞ்சிகையானது மாதா மாதம் தொடர்ந்து வருவதற்கும் அது தனது ஆழ்ந்த கருத்துக்களைப் தங்களுடன் பகிர்ந்து கொள்ளும் பொருட்டும் தங்களைத் தனது வாசகர்களாக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும் உரிய அங்கத்தவராக்கும் விபரத்தை கீழே தந்துள்ளோம். ஆகவே, அதனை பூரணப்படுத்தி தாங்களும் அங்கத்தவராகுங்கள் எனப் பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

## ஞான அறிவுச் சுடர் சந்தா விபரம்

1. மாதாந்த பிரதி ஒன்றின் விலை – 25/-
2. வருடாந்த சந்தா (தபாற் செலவு உட்பட) – 350/-
3. இந்தியாவுக்கு மாதாந்த தனிப்பிரதி (இந்திய ரூபாவில்) – 20/-
4. இந்தியாவுக்கு வருடாந்த சந்தா (இந்திய ரூபாவில்) – 300/-
5. உலகின் ஏனைய பகுதிகளுக்கு வருடாந்த சந்தா (தபால் செலவு உட்பட) – US$ 25

இலங்கையில் இருப்பவர்கள் 10 வருடங்களுக்கான சந்தா என்னும் வரிசையில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துக்கொள்ள எண்ணி ரூபா.1,000/- வைச் சந்தாப் பணமாக அறவிடத் தீர்மானித்துள்ளோம். நமது சஞ்சிகையில் 10 வருட அங்கத்தவராக இருப்பவர் ஆண்டு தோறும் சந்தாப்பணம் செலுத்தவோ அல்லது புதுப்பிக்கவோ வேண்டியதில்லை. ஆனால் சஞ்சிகை அனுப்பப்படும் விலாசத்தில் மாற்றம் ஏற்படின் அதனை அறிவித்தால் போதுமானதாக இருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

இச்சந்தாத் திட்டமானது உள்நாட்டுக்கு மட்டும் என்பதைத் தங்கள் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

இச்சஞ்சிகையைப் பெறும் தாங்கள் ஏற்கனவே சஞ்சிகையின் அங்கத்தவராகில் சஞ்சிகை வளர்ச்சிக்கு உதவும் முகமாக மேலும் ஒரு அங்கத்தவரைச் சேர்த்து தர முன்வருவீராக: தங்களது பணி எவ்வகையிலும் வளர்க.

........................................ இங்கே கிழிக்கவும் ........

இங்கே கிழிக்கவும்

## அங்கத்தவர் சந்தா விண்ணப்பம்

*நிர்வாகி*
*"ஞான அறிவுச் சுடர்"*
*கொழும்பு – 06.*

| அங்கத்தவர் இல | |
|---|---|

நான் "ஞான அறிவுச்சுடரின்" அங்கத்தவராக விரும்பி எனது 10 வருட/வருடாந்த சந்தாவாக ரூபா ................................................ பணமாக /காசோலையாக /காசுக்கட்டளையாக இத்துடன் அனுப்பி வைக்கின்றேன். இதை ஏற்றுக்கொண்டு என்னை தமது "ஞான அறிவுச்சுடர்" அங்கத்தவராக சேர்த்துக் கொள்ளும் படி வேண்டிக்கொள்கிறேன்.

அதற்குரிய பிரதியைக் கீழ்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு தயவாக வேண்டிக் கொள்கிறேன்.

அங்கத்தவர் பெயர் : ........................................................................

விலாசம் : ........................................................................

தொலைபேசி இலக்கம் : ........................................

அனுப்ப வேண்டிய முகவரி :
Gnana Publications,
Mr. P. Parasuraman,
No. 4, 1st Floor, Fussels Lane,
Wellawatte, Colombo - 06.
Contact Tel : 591644

........................................
அங்கத்தவர் கையொப்பம்

திகதி : ........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| MONDAY<br>திங்கள் | TUESDAY<br>செவ்வாய் | WEDNESDAY<br>புதன் | THURSDAY<br>வியாழன் | FRIDAY<br>வெள்ளி | SATURDAY<br>சனி | SUNDAY<br>ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| **APR30** சித்திரை 17<br>திதி - சப்தமி<br>நட்ச - பூசம்<br>யோகம்-மரண யோகம் | | | | | | **APR 1** பங்குனி 19<br>திதி - அட்டமி<br>நட்ச - திருவாதிரை<br>யோகம்-சித்தம முழுவதும் |
| **APR 2** பங்குனி 20<br>திதி - நவமி<br>நட்ச - புனர்பூசம்<br>யோகம்-அமிர்தசித்தம் | **APR 3** பங்குனி 21<br>திதி - தசமி<br>நட்ச - பூசம்<br>யோகம்-மரணயோகம் | **APR 4** பங்குனி 22<br>திதி - ஏகாதசி<br>நட்ச - ஆயிலியம்<br>யோகம்-சித்தம், ஏகாதசி | **APR 5** பங்குனி 23<br>திதி - துவாதசி<br>நட்ச - மகம்<br>யோகம்-அமிர்தசித்தம்.பிரதோசம | **APR 6** பங்குனி 24<br>திதி - திரயோதசி<br>நட்ச - பூரம்<br>யோகம்-சித்தம முழுவதும் | **APR 7** பங்குனி 25<br>திதி - சதுர்த்தசி<br>நட்ச - உத்தரம்<br>யோகம்-மரணயோகம்<br>பூரணை விரதம | **APR 8** பங்குனி 26<br>திதி - பூரணை<br>நட்ச - அத்தம்<br>யோகம்-அமிர்தசித்தம்முழுவதும் |
| **APR 9** பங்குனி 27<br>திதி - பிரதமை<br>நட்ச - சித்திரை<br>யோகம்-அமிர்தம் | **APR10** பங்குனி 28<br>திதி - துதியை<br>நட்ச - சுவாதி<br>யோகம்-மரணயோகம் | **APR11** பங்குனி 29<br>திதி - திருதியை<br>நட்ச - விசாகம்<br>யோகம்- அமிர்தசித்தம்,<br>சங்கடஹரசதுர்த்தி | **APR12** பங்குனி 30<br>திதி - சதுர்த்தி<br>நட்ச - அனுஷம்<br>யோகம்-மரணயோகம் | **APR13** பங்குனி 31<br>திதி - பஞ்சமி<br>நட்ச - கேட்டை<br>யோகம்-அமிர்தசித்தம் | **APR14** சித்திரை 1<br>திதி - ஷஷ்டி<br>நட்ச - மூலம்<br>யோகம்-சித்தம்<br>தமிழ் சிங்கள புதுவருடப்பிறப்பு | **APR15** சித்திரை 2<br>திதி - சப்தமி<br>நட்ச - பூராடம்<br>யோகம்-சித்தாமிர்தம் |
| **APR16** சித்திரை 3<br>திதி - அட்டமி<br>நட்ச - உத்தராடம்<br>யோகம்-மரணயோகம்,<br>அட்டமிநவமி | **APR17** சித்திரை 4<br>திதி - நவமி<br>நட்ச - திருகோணம்<br>யோகம்-சித்தம் | **APR18** சித்திரை 5<br>திதி - தசமி<br>நட்ச - அவிட்டம்<br>யோகம்-மரணயோகம் | **APR19** சித்திரை 6<br>திதி - ஏகாதசி<br>நட்ச - சதயம்<br>யோகம்-மரணயோகம் | **APR20** சித்திரை 7<br>திதி - துவாதசி<br>நட்ச - பூரட்டாதி<br>யோகம்-சித்தம முழுவதும் | **APR21** சித்திரை 8<br>திதி - திரயோதசி<br>நட்ச - உத்தரட்டாதி<br>யோகம்-சித்தம் | **APR22** சித்திரை 9<br>திதி - சதுர்த்தசி<br>நட்ச - ரேவதி<br>யோகம்-அமிர்தசித்தம் |
| **APR23** சித்திரை 10<br>திதி - அமாவாசை<br>நட்ச - அச்சுவினி<br>யோகம்-சித்தம முழுவதும் | **APR24** சித்திரை 11<br>திதி - பிரதமை<br>நட்ச - பரணி<br>யோகம்-சித்தம முழுவதும் | **APR25** சித்திரை 12<br>திதி - துதியை<br>நட்ச - கார்த்திகை<br>யோகம்-அமிர்தசித்தம | **APR26** சித்திரை 13<br>திதி - துதியை<br>நட்ச - ரோகிணி<br>யோகம்-மரணயோகம் | **APR27** சித்திரை 14<br>திதி - சதுர்த்தி<br>நட்ச - மிருகசீரிடம்<br>யோகம்-சித்தம முழுவதும்,<br>சதுர்த்தி விரதம் | **APR28** சித்திரை 15<br>திதி - பஞ்சமி<br>நட்ச - திருவாதி<br>யோகம்-சித்தம முழுவதும் | **APR29** சித்திரை 16<br>திதி - சஷ்டி<br>நட்ச - புனர்பூசம்<br>யோகம்-சித்தம முழுவதும் |


**2001-ம் ஆண்டு ஏப்ரல் மாத (April) மாத பஞ்சாங்க கலண்டர்**

**கிறின்விச் நேரத்திற்கு (இலங்கை பழைய நேரத்திற்கு) அமைந்த பஞ்சாங்க கணிப்பு**

**இம்மாத விசேஷ தினங்கள**

ஏப்ரல் 7 - பூரணை விரதம்
ஏப்ரல் 11 - சங்கடஹர சதுர்த்தி
ஏப்ரல் 14 - தமிழ் சிங்கள புதுவருடப் பிறப்பு
ஏப்ரல் 16 - அட்டமிநவமி
ஏப்ரல் 27 - சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவ்வாறான நவாம்சங்களைக் கொண்ட எமது மாத சஞ்சிகை மூலம் மனித வாழ்வுக்கு தேவையான சகல அம்சங்களையும் உள்ளடக்கி, அதன் ஒவ்வொரு பகுதியையும் மாதாமாதம் விரிவாக வாசகர்களுக்கு தரமுயற்சித்து அதை செயற்படுத்த எண்ணியுள்ளோம். இதில் வாசகர்கள் தங்கள் கருத்துக்களை தயங்காது வெளிப்படுத்தலாம் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இச் சஞ்சிகை மலர் ஞானா பப்ளிக்கேஷன்ஸ் நிறுவனத்தினரால், மயூறி என்ரபிறைசெஸ் நிறுவனத்தில் கணனி அமைப்புச் செய்து இல. 207, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு - 13. கௌரி அச்சகத்தில் அச்சிட்டு 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org